1043

ஸம்புடம் 3 வருஷச் சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [5

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)

...யர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,

(...ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

...ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்

பிரசுரம் செய்யப்படுவது

1937-வரு மே-மீ [வைகாசி-மீ

விஷயம்.

1.	குறிப்புகள்	1—4
2,	ஸ்ரீதேசிகன் திருவடிகள் விஷயத்தில் அண்ணாஸ்வாமி செய்தருளிய உபகாரம்	4—6
3.	நம்மாழ்வாரும் நம் தேசிகனும்	6—9
4.	ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி]	33—40
5.	கோதாஸ்துதி [தொடர்ச்சி]	67—74
6:	ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியாவிமர்சம்	1—10

ஜீவித சந்தாதாரர்.

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையின் அபிவிருத்தியை உத்தேசித்து சென்னை கவர்ண்மெண்டு டெவலப்மெண்டு ஸெகரிடேரியட் அஸிஸ்டெண்டு ஸெகரிடரி கமலாபுரம்

ஸ்ரீமான் **R. ராமஸ்வாமி அய்யங்கார்** அவர்கள் ஜீவிதசந்தாவாக ரூ. 50 கொடுத்திருக்கிறார்.

இன்னம் ஆஸ்திகதனவான்கள் இந்தமாதிரி ஸஹாயம் செய்து ஸபையின் உபயோகத்தை எல்லாரும் அடையுமாறு செய்ய வேண்டுமென்று ஸபையார் பிரார்த்திக்கிறார்கள்.

தேவை

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணிக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், பத்திரிகைகளைச் சந்தாதார்களுக்குக் கொடுக்கவும் தகுந்த ஏஜண்டுகள் தேவை. கமிஷன் முதலிய விபரங்களுக்கு கார்யதரிசிக்கு ரிப்ளைகார்டில் எழுதியோ, அல்லது நேரில்வந்து விசாரித்தோ தெரிந்து கொள்ளலாம்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணஸபைக்கு 5. புதுமெம்பர்களைச்சேர்த்து அவர்களுடைய சந்தாவை ஸ்ரீரங்கம் தலைமை ஆபீஸுக்காவது சென்னைக் கிளை ஆபீஸுக்காவது ஆனிமாசக் கடைசிக்குள் அனுப்புகிறவர்களுக்கு மதுவித்யாமார்க்க தர்பணம் பூர்ணத்வ விசாரம் என்னும் இருபுஸ்தகங்கள் இனாமாகக்கொடுக்கப்படும். இதேமாதிரி 5 போஷகர்களைச் சேர்த்து அவர்கள் சந்தாவை அனுப்புகிறவர்களுக்கு பரபக்ஷநிராகிருதி என்னும் புஸ்தகம் ஒன்று இனாம். இந்த க்ரந்தங்களின் பெருமையைப் பெரியோர்கள் ப்ரசம்ஸித்து இருப்பதால் இங்கு ஒன்றும் கூற வேண்டிய அவசியம் இல்லை.

27 AUG 1937

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3	ஈச்வர-ஞு வைகாசி-மீ	ஸஞ்சிகை 5

ஜீவநம் ஜநதாநாம் ஜீயாத் க்ஷேமவ்ருத்தஸ்ய ஸர்வஶ: ।

ஸந்ததம் ஸந்த்ருஷ்டா வேங்கடேஶார்ய ஸூக்தய: ॥

குறிப்புகள்.

வைகாசி மாதம்—

இந்த மாஸத்தில் வரும் விசேஷ தினங்களுள் முக்கியமானவை ஸ்ரீ நரஸிம்மஜயந்தியும் நம்மாழ்வாருடைய அவதார தினமுமாகும். பகவான் புத்தனாக அவதாரம் செய்ததும் இந்த மாஸத்தில்தான்.

ஸ்ரீ நரஸிம்மஜயந்தி:—

பகவான் எடுத்த அநேக அவதாரங்களுள் நரஸிம்மாவதாரம் ஓர் விலக்ஷணமான அவதாரம். இதை

“எங்குமுளன் கண்ணனென்ற மகனைக்காய்ந்து
இங்கில்லையா லென்று இரணியன் தூண்புடைப்ப
அங்கு அப்பொழுதே அவன்வீயத்தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே ?”

என்று கொண்டாடுகிறார் ஆழ்வார். தமது பக்தனாகிய தானவ சிசுவைக் காப்பாற்றவேண்டி ஒரு தூணிலே மிகவும் அவஸரமாக வந்து அவதரித்து ஹிரண்ய நிரஸநம்பண்ணி ப்ரஹ்லாதனை அனுக்ரஹித்துவிட்டுத் தாம் வந்த அவஸரம்போல் மறைந்த அவதாரம் இது.

சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்த காலத்தில் “விததம் ராவயாமாஸ ததா துந்துபயோ நநது:” என்று தமது

189905

பெருமைக்குத் தகுந்தவராக ஒரு தகப்பனைத் தேடினர். "ததஶ்ச த்வாதஶே மாஸே" என்று பன்னிரண்டு மாஸம் கௌஸல்யையின் திருவுதரத்தில் வஸித்தார். "சைத்ர: ஸ்ரீமாநயம் மாஸ:" என்று ஒரு நல்ல மாஸம் பார்த்துப் பிறந்தார். இந்த ஸம்ப்ரமங்களுக்கெல்லாம் நரஸிம்மாவதாரத்தில் அவகாசமில்லை. கஜேந்த்ராழ்வானைக் காப்பாற்றவேண்டி பகவான் ஓடி வந்த அவஸரத்தை

"பங்கயத் திருவைப்பாரான் பணிமுடி நிழலைத்தேடான்
சங்குசக்கரங்க ளேந்தான் தன்னெதிர் தாழ்ந்துநிற்கும்
இங்கிதக் கருடன்மீதி லேறிடான் இபத்தைக்காக்கக்
கங்கையைப்பெற்ற பாதசாரியாய்க் கடுகிவந்தான்"

என்று வர்ணித்துள்ளார்கள். இப்படி ஓடிவருவதற்குக்கூட நரஸிம்மாவதாரத்தில் அவகாசம் இல்லை.

யஸ்யாபவத் பக்தஜநார்த்திஹந்து:
பித்ருத்வமந்யேஷ்வவிசார்ய தூர்ணம் |
ஸ்தம்பேவதாரஸ்தமநந்யலப்யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||

என்றபடி பக்தனுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டுமென்கிற த்வரையில் பக்கத்திலேயிருந்த ஒரு தூணில் வந்து பிறந்தார். பிறந்தவர் தாம் ஒரு நல்ல நேரம் பார்த்துப் பிறந்தாரோ? இல்லை. பகலும் இல்லாமல் இரவும் இல்லாமல் இரண்டுக்கும் நடுவிலேயுள்ள ஸந்த்யாகாலத்தில் வந்து பிறந்தார். ஒரு மனுஷ்ய ரூபத்திலேயாவது பிறந்தாரோ ? அதுவுமில்லை. நரங்கலந்த சிங்கமாய்ப் பிறந்தார். அவதாரங்களுக்குள்ளே இதுதான் மிகவும் வேடிக்கையான அவதாரம் என்பீர்களோ ? இன்னும் கேளுங்கள். உயிருள்ளது, உயிரற்றது என்று சொல்லுவதற்கரிதான நகமே இவருக்கு ஆயுதமாயிற்று. இதெல்லாம் ஒரு சேராச்சேர்த்தியாக இருக்கிறதே என்பீர்களானல், இதைக்காட்டிலும் ஆச்சர்யம் இன்னொன்றுள்ளது. பயங்கரச் சின்னங்களுடன் கோபத்தைக் கக்கும் திருமுக மண்டலத்திலுள்ள அதே கண்கள் அதே காலத்தில் குழந்தையான ப்ரஹ்லாதனுக்கு ப்ரீதி நிறைந்த அருளைச் சொரிந்துகொண்டிருந்தன. இந்த அவதாரம் ஆழ்வாரை "ஆடிப்பாடி அகங்கரைந்து நாடி நாடி நரசிங்கா" என்னச் செய்ததில் என்ன ஆச்சர்யம் ?

இந்த அவதாரம் ஸ்ரீ தேசிகனுடைய மனத்தையும் உருக்கி விட்டதே ! என்பீர்களானல் அரக்கன்வீட்டுத் தூண் பிரம்மாவுக்குப் பிதாமஹியானல் மன முருகாமல் என் செய்யும் ?

நம்மாழ்வார் அவதாரதினம்:—

நரஸிம்ம ஜயந்தியும் நம்மாழ்வாருடைய அவதாரதினமும் ஒரே நாளில் வருகின்றன. இவ்விரண்டு அம்சங்களின் உயர்வு தாழ்வுகளைப்பற்றி யோசிக்கப்புகுந்த நாம்

வஞ்சஞ்செய்தான் தொழுனைப்புனலுள்
நெஞ்சங்கவர்ந்தாள் நிறையென்கோயாம் ?
நெஞ்சங்கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சஞ்செய்தான் வடிவென்கோ யாம் ?

தொழுனையாற்றில் விளையாடும்போது (ராதையின் துகிலைக் கண்ணன் ஒளித்து வைத்துவிட்டான். அப்போது ராதையின் அழகில் கண்ணனும் கண்ணனுடைய அழகில் ராதையும் ஈடுபட்டு விட்டார்கள். இந்த ஸமயத்தில்) ராதை கண்ணன் என்னும் இவ்விருவருடைய அழகில் எது சிறந்தது என்று யோசிக்கப் புகுந்து தடுமாறிய கவியின் மனநிலையை யடைந்தோம்.

உண்மையில் நரசிங்கன் யார் ? நம்மாழ்வார் யார் ? இவரேயவர். அவரேயிவர். நரசிங்கன் மத்ஸ்ய கூர்மாதி யவதாரங்களிலேயொருவர். ஆழ்வாரோ பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபினவமாகப் பண்ணிய தசாவதாரத்திலே ஒருவர்.

நரசிங்கனுடைய மூச்சுக்காற்று வேதங்கள். நம்மாழ்வாருடைய மூச்சுக்காற்று தமிழ் வேதங்கள்.

நரசிங்கனை ஒரு தனிப் படலத்தில் புகழ்ந்த கம்பர், நம்மாழ்வார் விஷயமாக சடகோபரந்தாதி யென்றோர் தனிப் ப்ரபந்தமே இயற்றியுள்ளார். இவ்விருவருடைய அவதார தினங்களும் ஒரே நாளில் வருவதும் கவனிக்கத்தக்கது. அன்று ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ தேவராஜனுடைய கருடோத்ஸவமும் நடைபெறுவதும் ஒரு விசேஷமாகும். *

ஸ்ரீதேவாதிராஜன், 'அருளாழிப்புட்கடவீர் அவர்வீதி ஒரு நாள்' என்று மனோரதித்த நம்மாழ்வார் திருவீதியில் எழுந்தருளி, அவருக்கு ஸேவை ஸாதித்து திருமாலை ப்ரஸாதித்துப் பின்பு,

---

ஷை உத்ஸவத்தில் (நம் ஸபையின் சார்பில்) நடக்கவிருக்கும் ஸதஸ்ஸை ஸ்ரீதேசிகாபிமானிகள் நடத்திவைக்க வேண்டுமென வேண்டுகிறோம்.

“ ஸ்ரீஶைலபூர்ண ஸேவ:
காஞ்சீ தவஸ்ரீ யதிவரதேவோ தயோ: ”

என்றபடி தம்மை சீரிட்டு வளர்த்த ஸ்ரீபாஷ்யகாரருக்குத் தர்சனமும் திருமாலையும் தந்து, பிறகு தூப்புலுக்கு எழுந்தருளி அங்கே தமக்கு ‘அத்திகிரி அருளாளப்பெருமாள் வந்தார்’ என்று விருதுதியருளும் ஸ்ரீமத் வேதாந்ததேசிகனுக்கு பெரிய திருமாலையுட்பட ஸகல மரியாதைகளையும் அனுக்ரஹித்தருளும் திவ்விய ஸேவையைக் காண்பதே கண் படைத்த பயனாகும் என்பதை அனுபவித்தாரே அறிவார்.

பௌத்த ஜயந்தி:—

பௌத்த ஜயந்தியும் இந்த மாதமே வருகின்றது. “பௌத்தர்கள் எல்லாரும் வேதபாஹ்யர்கள். ஆனால் புத்தனாக அவதாரம் பண்ணியவர் எங்கள் பெருமாள்” என்றீரே. இது” தேசிகன் ஸாதித்த அர்த்தங்களெல்லாம் தப்பு. ஆனால் தேசிகன் எங்கள் ஆசார்யன் “என்று அண்ணாஸ்வாமி சொல்லுவதுபோல் இருக்கிறதே” என்றார் ஒருவர். இதை நாம் ஒத்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீதேசிகன் திருவடிகள் விஷயத்தில் அண்ணாஸ்வாமி செய்தருளிய உபகாரம்.

காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர். டீ. முத்துஸ்வாமி அய்யர் என்பவர் தமது சிறுபிராயத்தில் ஒருவரிடம் குமாஸ்தாவாக இருந்து கணக்கு எழுதிக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு மாசம் சம்பளம் கிடைத்தது ரூ-5. இதைப் பெற்றுக் கொண்டு அவர் மிகவும் திருப்தியோடு இருந்தார். அப்போது அவருடையமுதலாளிமாத்திரம் அவரை மிகவும் நன்றாக நடத்தி வந்திருந்தால், முத்துஸாமிஅய்யர் தமது ஆயுள்முழுவதும் ஒரு குமாஸ்தாவாகவே இருந்திருப்பார். ஆனால் அவர் ஒருநாள் தமது வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது வேலையைச் சரிவரச் செய்யவில்லையென்று அவர்முதலாளி அவருடைய தலையில் குட்டினாராம். எந்தவேளையில் குட்டினாரோ ? முத்துஸாமிஅய்யருக்கு ரோஷம் உண்டாயிற்று. அந்த வேலையை விட்டு விலகினார். மிகவும் கஷ்டப்பட்டுப் படித்தார். கல்வியில் விருத்தியடைந்தார். நாளடைவில் சென்னை ஹைக்கோர்ட்டில்

நீதிபதியானார். தமக்கு இந்தப் பெருமைகிடைத்தற்குக் காரணமாக இருந்த தமது பழைய முதலாளியை மாத்திரம் மறக்கவில்லை. அவர்மாத்திரம் தமது தலையில் குட்டாமலிருந்தால் தமக்கு ஹைக்கோர்ட் ஜட்ஜ் உத்யோகம் எங்கே கிடைத்திருக்கப் போகிறது ? என்று எண்ணி அவருடைய பத்து விரல்களுக்கும் பத்து வைரமோதிரங்கள் பண்ணி அவருக்குக் கொடுத்தாராம். இது நாம் பெரியோர்களிடமிருந்து கேட்ட வரலாறு.

நமது தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையும் ஒரு விதத்தில் ஸர். முத்துஸாமி அய்யர் போலவே இருக்கிறது. தேசிகன் திருவடிகளுக்குள் ஒற்றுமை ஏது ? அவர்களை நெல்லிக் காய்முட்டை என்றுகூட ஒருவர் அழைக்கிறார். அவர்கள் ஒன்று சேறுவது கஷ்டம். சேர்ந்தால்கூட அல்ப காரணங்களுக்காக மறுபடியும் பிரிந்துவிடுவார்கள்.

“ஒன்றுபட்டா லுண்டுவாழ்வே-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே”

என்கிறபாட்டு அவர்களுக்கு ஞாபகத்துக்கு வருவது கிடையாது.

இப்படி இருக்கும்போது திடீரென்று அவர்களுக்கோர் அதிருஷ்டம் பிறந்தது. ஸ்ரீதேசிகன் அவதாரம்பண்ணிய காஞ்சியிலேயே அண்ணாஸ்வாமி என்று ஒருவர் கிளம்பினார்.

ஸ்ரீதேசிகன் மாதிரியே தாமும் பெரியஆசார்யனாகவேணும் என்கிற ஆசையைக்கொண்டார். “ தேசிகன் எழுதியது தப்பு. தாம் எழுதியதுதான்ஸரி ” என்று சொன்னால்தான் தாம் சீக்கிரத்தில் புகழ்பெறலாம் என்று நினைத்தார். உடனே ஆரம்பித்தாரையா ! துராக்ரஹ நிராக்ருதி, துர்வாதிகர்வ நிர்வாபணம், திருப்பாவை வ்யாக்யானம் என்றெல்லாம் பெயர்வைத்து புஸ்தகங்களை எழுதித் தள்ளினார்.

இந்தப் புஸ்தகங்களைக் கொஞ்சம் மரியாதையான முறையில் எழுதியிருந்தால் அதைக் கவனிப்வர் ஒருவரும் இருந்திருக்க மாட்டார்கள். தேசிகனையும் அவர் திருவடிகளையும் வார்த்தைக்கு வார்த்தையாக தூஷித்து எழுதியிருந்ததால், குட்டுப்பட்ட ஸர். முத்துஸாமி அய்யர்மாதிரி இவர்களுக்கும் ரோஷம் பிறந்துவிட்டது. “ சும்மா இருந்தாலிருந்தேன், எழுந்தேனேயாகில் பெருங்காளமேகம் பிள்ளாய் ” என்று காளமேகப்புலவர் சொன்னது மாதிரி அண்ணா எழுதிய தப்புப்புஸ்தகங்கள் எல்லாவற்

றிற்கும் ஒன்று விடாமல் பதில் புஸ்தகங்களை எழுதித்தள்ளிவிட்டார்கள். இத்தோடு நிற்காமல் இப்போது புதிதாக ஸ்ரீதேசிகன் திருவடிகளுக்குள் உண்டான ஒற்றுமை எப்போதும் நிலைநிற்கும்வண்ணம் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணியை ஆரம்பித்துவிட்டார்கள். இதில் அண்ணாவைப்போல் இன்னொருவர் கிளம்பி மறுபடியும் தப்பு அர்த்தம் பண்ணாதபடி, தேசிகன் க்ரந்தங்களுக்கெல்லாம் சரியான அர்த்தத்தை எழுதி வெளிப்படுத்துகிறார்கள். முன்னே வெறுமனே தூங்கிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் நான் முன்னே நீ முன்னே என்று போட்டி போட்டுக்கொண்டு ஐம்பதும் அறுபதுமாகப் பணம்கொடுத்து உதவுகிறார்கள். இந்த ஸம்ரக்ஷிணியின் மலர்கள் ராமானுஜ சித்தாந்தம் போலே "வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று விருத்தியாகிக்கொண்டே இருக்கிறது. தயாசதகம் அச்சுப்போட்டு இன்னும் நாலைந்து மாஸமாகவில்லை. இன்று கேட்பவருக்குக் கொடுக்க ஆபீஸில் காப்பி இல்லை. இன்னொரு பதிப்புப் போடச்சொல்லி பலர் நிர்ப்பந்திக்கிறார்கள். இப்படிப் பலவகையிலும் விருத்தியடைந்த ஸ்ரீதேசிகன் திருவடிகள் ஹைக்கோர்ட் ஜட்ஜியின் பதவியையடைந்த ஸர். முத்துஸாமி அய்யர் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இத்தனைக்கும் காரணமாக இருந்த காஞ்சீபுரம் அண்ணாஸ்வாமி இருக்கிறஇடம் தெரியவில்லை. அவருக்கு ஸர் முத்துஸாமி அய்யர் கொடுத்த மாதிரி வைர மோதிரம்பண்ணிக் கொடுக்காவிட்டாலும், அவர் நமக்குச்செய்யாமற் செய்த உபகாரத்துக்குக் கிருதக்ஞதையோடு இருக்கவேணும் என்று ஒருவர் எழுதுகிறார்.

நம்மாழ்வாரும் நம் தேசிகனும்.

பரதாய பரம் நமோऽஸ்து தஸ்மை
ப்ரதமோதாஹரணாய பக்திபாஜாம் |
யதுபஜ்ஞமஶேஷத: ப்ருதிவ்யாம்
ப்ரதிதோ ராகவபாதுகாப்ரபாவ: ||

என்று தமது பாதுகாஸஹஸ்ர க்ரந்தத்தின் மங்கள ச்லோகங்களில் சக்ரவர்த்தித் திருமகனுடைய பாதுகைகளின் ப்ராபாவத்தை உலகத்துக்கு வெளிப்படுத்திய பரதாழ்வானை கொண்டாடுகிறார் ஸ்வாமிதேசிகன்.

பகவானுடைய பாதுகை ஸ்ரீ சடகோபன். நம்பெருமாள் விஞ்சிய வாதரத்தால் "நம் சடகோபனைப் பாடினையோ?" என்று கேட்கும் பெருமையுள்ளவர் இவர். வேதங்களை தர்மங்களுக்கெல்லாம் மூலம் என்றால், இவ்வேதங்களை அந்தணரந்தியர் எல்லையில் நின்றவனைத்துலகுக்கும் உபயோகமாகுமாறு செய்வித்த புண்ணிய புருஷன் இவரே. இவருடைய ப்ரபந்தங்கள் கால வைஷம்யத்தால் லுப்தமாகப் போனவளவில், ஸ்ரீமந்நாதமுனிகள் பரம கருணையுடனே அம்புவியிலுள்ளோர் அனைவரும் ஈடேறவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி யோக தசையில் ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து, அவரிடமிருந்து மந்த்ர மந்த்ரார்த்தங்களையும் த்ரமிட காதைகளையும் உபதேச பரஸ்பரமாகப் பெற்று அவற்றைப் ப்ரவசனம் செய்வித்தார். இதனால் நடுவில் சற்றே மறைந்திருந்த ஆழ்வாருடைய ப்ரபாவத்தை உலகமடங்கலும் நன்கு அறிந்தது.

ப்ரபந்ந ஜன கூடஸ்தர் என்று உலகம் கொண்டாடும் இவ்வாழ்வார் "ஓர் வைகாசி விசாகந்தன்னில் எழில் குருகையில்" வந்தவதரித்தார். இவரை ஸேனைத்தலைவரின் அவதாரம் என்றும் பகவதவதாரம் என்றுங் கூறுவர் அறிந்த பெரியோர். "பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஓர் தசாவதாரம் பண்ணி" என்பது ஸ்ரீ வேதாந்த குருவின் ஸூக்தி.

நிற்க, ஓர் சேதனன் பகவானுடைய ஸம்பந்தம் உண்டானவன்றே

க்ஷுத்த்ருஷ்ணாதி ஹே ஶோகா: [illegible] வயம் வயம் |
[illegible] நாராயணபரா வயம் ||

என்று உலகநடைக்கு மாறாக ஆவதுபோல் பிறந்தவன்றுதொட்டு "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" என்றபடி பகவதனுபவத்தில் ஈடுபட்ட ஆழ்வாருக்கு "உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனாக இருந்ததால், இவர் குழவிப்பருவத்தில்கூட பாலும் வேண்டாது பரிபூர்ணராக இருந்தார். இதனால் இவருக்கு இவரது திருத்தந்தையார் மாறனென்று திருநாமமிட்டார்.

இவ்வாறு குழந்தையிலிருந்து மிகவும் விலக்ஷணமாக வளர்ந்த இவருக்கு பதினாறுபிராயம் நிறம்பினவளவில், பரமபத நாத

னுடைய நியமனம் பெற்ற சேனைத்தலைவர் ஏகாந்தமாக எழுந்தருளியிருந்து பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து ஸகல மந்த்ரார்த்தங்களையும் உபதேசித்தருளினர்.

இவ்வாறு இருக்குநாளில் மதுரகவியாழ்வாருக்கும் இவருக்கும் பகவத் ஸங்கல்பத்தால் ஏற்பட்ட சேர்க்கை லோகோஜ்ஜீவகமாயிற்று. "சித்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று மதுரகவியாழ்வார் கேட்ட முதல் கேள்வியும், அதற்கு "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று ஆழ்வார் அளித்த உத்தரமும் ஆசார்ய குணங்கள் நிறைந்த ஒரு ஸதாசார்யனைத் தேடிக் கண்டுபிடித்து அவரையாச்ரயிக்கவேண்டுமென்கிற ஸூக்ஷ்மத்தை வெளிப்படுத்துகின்றன. புஸ்தகசாலையிலுள்ள சில புஸ்தகங்களைப் பார்த்தவுடன் தம்மை ஸர்வக்ஞராக எண்ணித்திரியும் பெரியோர்கள் இதைக் கவனிப்பார்களா?

மதுரகவியாழ்வார் தத்வஹித புருஷார்த்தங்களைத் தமக்கு விளக்கியருளும்படி ப்ரார்த்திக்க,

'நாப்ருஷ்ட: கஸ்யசித் ப்ரூயாத்'

என்கிறபடி ஒரு வ்யாஜமாத்ரம் எதிர்பார்த்திருந்த ஆழ்வார் "சுரக்கும் சுரபிகள்போற் சொரிகின்றனர் சொல்லமுதே" என்று பின்னிட்ட ஆசார்யர்களெல்லாருங் கொண்டாடும்படி நான்கு வேதங்களின் ஸாரத்தையும் திருவாய்மொழி முதலிய நான்கு ப்ரபந்தங்களால் அருளிச்செய்தார்.

இவ்வாழ்வாருடைய ப்ரபாவங்களையும் அனுபவங்களையும் விரித்துரைக்க நம் போலியர்க்கு இயலுமோ? ஸ்வாமி தேசிகன்

> நிச்சேஷமம்பரதலம் யதி பத்ரிகா ஸ்யாத்
> ஸப்தார்ணவீ யதி ஸமேத்ய மஷீபவித்ரீ ।
> வக்தா ஸஹஸ்ரவதந: புருஷ: ஸ்வயம் சேத்
> லிக்யேத ரங்கபதிபாதுகயோ: ப்ரபாவ: ॥

(கொஞ்சமும் மீதியில்லாது ஆகாசம் முழுவதையும் பத்திரிகையாக வைத்துக்கொண்டு, ஏழு ஸமுத்ரங்களையும் ஒன்றாகச்சேர்த்து மசியாக வைத்துக்கொண்டு, ஸஹஸ்ர சீர்ஷனாக புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்ட பகவானே சொல்லி தானே எழுதுவாரானால், ஒருகால் ஸ்ரீரங்கபதியின் பாதுகைகளுடைய ப்ரபாவம்

எழுதப்படலாம்) என்று ஸாதித்தபடி பகவான்தான் விரித்துரைக்கவேண்டும். ஸ்ரீ தேசிகனுடைய பாதுகாஸஹஸ்ரமும் கம்பருடைய சடகோபரந்தாதியும் மாமகிழ்மாறன் வண்புகழேயாகும். வகுளாபரணப் பெருமாளுடைய தமிழின் வாசியறிந்துரைக்குந் தேசிகனர்

> "தண்பொருநல்வருங்குருகேசன் மகிழ்ந்து பாடும்
> செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித்
> தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" (என்றும்)
> "விண்ணுலகின் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு
> விண்ணவர்தங் குழாங்களுடன் வேதம் பாடிப்
> பண்ணுலகில் படியாத விசையால் பாடும்
> பல்லாண்டே * பல்லாண்டும் பாடுவோமே"

என்றும் மனமுருகிப் பாடுகின்றார்.

பரம வைஷ்ணவத்வேஷியான ஒரு அரசன் தன் மந்திரியிடம் வைஷ்ணவ ஸித்தாந்தத்தையே மறையும்படி செய்ய ஒரு உபாயம் சொல்லும்படி கேட்டானாம். அதற்கு மந்திரி "அரசே! இதைத்தான் நாம் ஏற்கனவே செய்துவிட்டோமே, நமது ராஜ்யத்திலுள்ள விஷ்ணு கோவில்கள் எல்லாவற்றையுந்தான் இடித்துவிட்டோமே." என்று பதில்கூற, அரசன் "அடே அசடே! கோவில்களை இடித்து என்ன பயன்? வைஷ்ணவம் ராமாயணத்திலும் திருவாய்மொழியிலுமன்றோ கோயில்கொண்டிருக்கிறது" என்றானாம்.

திருவாய்மொழி வைஷ்ணவத்துக்கே ஒரு பெரிய அரணாகும். இதன் பெருமையை உலகறியச் செய்யவேண்டி, நம் தேசிகன் அருளிச்செய்திருக்கும் கிரந்தங்கள் பலவாகும். இந்த க்ரந்தங்களை ஸம்ரக்ஷிப்பதுதான் திருவாய்மொழியை ஸம்ரக்ஷிப்பதாகும்.

---

* பல்லாண்டு— இது திவ்யப் பிரபந்தம் முழுவதையும் விவக்ஷிக்குமென்பது ஸுப்ரஸித்தம்.

ஸ்ரீ:

ஓர் நற்செய்தி.

நமது ஸபையார் ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்த ரத்னமாகிய தயாசதகஸ்தோத்ரத்தை பதவுரை குறிப்புகளுடன் வெளியிட்டதும், இப்புஸ்தகம் வெளிவந்த மிகச்சிறிது காலத்துக்குள் அச்சிட்ட சுமார் 1600 காப்பிகளும் செலவாகிவிட்டதும் எல்லோரும் அறிந்தவிஷயமே இப் புத்தகம் வேண்டுமென்று பலர் கடிதமூலமாகவும் சிலர் நேரிலும் நம்மைக் கேட்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்க தற்காலம் நம்மிடம் புஸ்தகம் இல்லாமை பற்றி வருந்துகிறோம். இவர்களுள் சிலர் இப் புஸ்தகத்தை மறு பதிப்பாவது போட்டு வேண்டுபவர்கெல்லாம் கொடுத்து உதவுமாறு நிர்ப்பந்திக்கிறார்கள். ஆகையால் இப் புஸ்தகத்தைச் சில சீர்திருததங்களுடன் உயர்ந்த கிளேஸ் பேபரில் மறுபடியும் பதிப்பிப்பதாக நிச்சயித்திருக்கிறோம். நமக்கு வியாபாரம் என்பது முக்கிய நோக்கமல்லாமையாலும் அச்சிடுவதற்கு இன்னும் பலவேறு க்ரந்தங்கள் இருப்பதாலும், இப்போது அவசியமாகவேண்டிய அளவு மாத்திரமே காப்பிகள் அச்சிடுவதாக உத்தேசம்.

வியாபாரிகள் மொத்தமாகவேண்டுபவரிருந்தால் தங்களுக்கு வேண்டிய காபிகள் எவ்வளவென்று குறிப்பிட்டு விலையில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் (25) முன் பணமாக வருகிற வைகாசி மாதக் கடைசிக்குள் அனுப்பினால், அவர்கள் ஒரேகாலத்தில் 20 புஸ்தங்களுக்குக் குறையாமல் வாங்குவதாக இருந்தால் அவர்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் தருவதாகத்தீர்மானித்திருக்கிறது. இதை யாவரும் கவனித்துப் பயன் படுத்திக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

(தயாசதகம், தனிப்பிரதி விலை ரூபாய் ஒன்று.)

(தபால் செலவு அணா நான்கு)

கார்யதர்சி

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய ரக்ஷணஸபா,

கிருஷ்ணபவனம்,

வேப்பேரி, சென்னை.

முழுதுமோர் ஆசமனத்தால் உறிஞ்சி(ப்ரளயம்செய்து) தரையை மிச்சம் வைத்ததில் மற்றோர் ஆச்சரியம். மஹாப்ரளயத்தில் தரையெல்லாம் ஜலத்திற்குள் ப்ரளயமடையும்; தரையெல்லாம் ஜலமாகும். இந்த ஆசமனப்ரளயத்தில் ஜலத்திற்கு ப்ரளயம். தரைக்குப் பரிசேஷம். இங்கே முத்துக்களின் ஒளி முறுவலுக்கு உவமை. சான்றோர் இடியிடியென்று சிரிக்கமாட்டார். சப்தமேயில்லாமல் மந்தஹாஸம் மட்டுமே. (7)

ப்ரதிபந்நவாமத்ருஷ்டி:
ஸ்தந இவ கச்சித் ஸமுந்நதோऽப்யதிகம் ।
பதநமதிகம்ய ஸமயே
பரிஹாஸரஸாவஹோ பவதி ॥ ॥ அ ॥

ப்ரதிபந்நவாமத்ருஷ்டி:
ஸ்தந இவ கச்சித் ஸமுந்நதோZப்யதிகம் I
பதநமதிகம்ய ஸமயே
பரிஹாஸரஸாவஹோ பவதி ll (8)

(ப-ரை) ஸ்தந இவ [ஸ்தந இவ] - தனத்தைப்போல, ப்ரதிபந்நவாமத்ருஷ்டி: [ப்ரதிபந்நவாமத்ருஷ்டி:] - ஸ்த்ரீயை ஆச்ரயித்த, (வக்ரத்ருஷ்டியை, வக்ரபுத்தியையுடைய), கச்சித் [கஶ்சித்] - ஒருவன், அதிகம் [அதிகம்] - மிகவும், ஸமுந்நதோऽபி [ஸமுந்நதோZபி] - உயர்த்தியை அடைந்தாலும், ஸமயே [ஸமயே] - ஓர் காலத்தில், (வாதப்போரில், தர்சனத்தில், அதாவது- மதத்தில்) பதநம் [பதநம்] - பதனத்தை, (வீழ்க்கையை), அதிகம்ய [அதிகம்ய]-அடைந்து. பரிஹாஸரஸாவஹோ பவதி [பரிஹாஸரஸாவஹோ பவதி]-சிரிப்பிற்கு ஆளாவான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:- தத்துவங்களை ருஜுவாகப்பாராமல் குத்ருஷ்டியால் வக்ரமாகப்பார்த்து, குதர்க்கங்களால் சப்தாடம்பரம்செய்து, தன் தப்புஸமயத்தை(தர்சனத்தை)ஸாதிக்கத்தொடங்கி தன் கக்ஷியை உயரமாக ஓங்கச் செய்ததுபோல கர்வப்பட்டவன் தன் குதர்க்கங்கள் வீணாகித் தன் கக்ஷி கீழே நிஸ்ஸாரமென்று விழுந்தவுடன், சிரிப்புக்கு இடமாவான்.

அல்பஸ்வபாவனுயிருப்பவனொருவன் ஏதோ ஓர் அத்ருஷ்டத்தால் (லக்ஷ்மீகடாக்ஷத்தால்) ஐச்வர்யத்தைப் பெற்றதும் மதமேறி கர்வித்திருக்கையில், ஐச்வர்யம் நழுவிக் கீழே விழுந்ததும் சிரிப்புக்கு இடமாவான். " ஒரு நாயகமாய் ஓட உலகுடனாண்டவர் கருநாய் கவர்ந்த காலர் சிதகிய பானையர் பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் புகுவர் ". ஐச்வர்யம் வந்த காலத்திலும் அடக்கமாக ஒரே சீராயிருந்தால், அது நழுவினாலும் சிரிப்புக்கு இடமாகார். 'அதிகமான உச்ராயம் (உயர்த்தி) பதனத்திற்கு ஹேது'வென்பர். 'பதநாந்தா: ஸமுச்ரயா:' என்றார் பரதனிடம் ராமன். இங்கே ஸ்த்ரீயின் ஸ்தனத்தை த்ருஷ்டாந்தமாக எடுத்தது மிகவழகு. 'வாமத்ருஷ்டி' என்று ஸ்த்ரீக்குப் பெயர். ஓர் ஸ்த்ரீயை ஆச்ரயித்த தனமென்பது யௌவனத்தில் மிக்க உயர்த்தியையும், காடிந்யத்தையும் அடையும். 'துங்கஸ்தனம்' (உந்நதமான ஸ்தனம்), 'பர்வதஸ்தனம்' என்று வர்ணிப்பர். அதனால் மிகக் கர்வமிருக்கும். வயதானதும் விழுகையை அடையும்போது, கொண்ட கர்வமெல்லாம் போகும்; பரிஹஸிக்கவிடமாகும். ' காற்றுப்பைபோல்' என்பர் உண்மையான ஸாரமில்லாதவரை. 'மாம்ஸசோணிதமயமான தனபாரத்தைப் பார்த்து மோஹமடையாதே' என்றார் ' பஜகோவிந்தத்தில் '. 'புஜிக்கைக்கிடான யோக்யதை குன்றினவாறே மிகவும்பரிபவிக்கப்படுவர்' என்று 'கொண்டபெண்டிரில்' பிள்ளானருளிச்செய்ததை நினைக்கவும். தர்மபத்னியிடம் மிக்க அன்பிருப்பது உசிதமே. அந்த அன்பு உடம்பைப்பற்றியதாக விராமல், ஆத்மாவைப்பற்றி யிருப்பது ரஸம். ஆத்மாவுக்கு ஜரையில்லை. விகாரமில்லை. 'ஜரஸா யஸ்மிந் அஹார்யோ ரஸ:' என்றார் ராமன் ஸீதைக்கும் தமக்குமுள்ள தாம்பத்யஸ்நேஹத்தைப்பற்றி. முக்யமாக பரஸ்பரம் ஆத்மாவைப் பற்றியதாயுள்ள தாம்பத்யஸ்நேஹரஸம் மூப்பினால் குறையாது; விகாரமடையும் உடலைப்பற்றியும் உடம்புஅழகு என்பதைப்பற்றியுமிருந்தால், முன்னிருந்த போகரஸம்போய் மற்றோர் ரஸம் வருமென்கிறார். அதென்ன ரஸமென்றால், 'பரிஹாஸாரஸம்' என்பது அழகு. தன்னையும் தான் பரிஹஸிக்க நேரிடும். பர்த்தாவுள்பட பிறரும் பரிஹஸிக்க நேரிடும். தர்மானுஷ்டானத்தில் தோழி என்றும், ஸந்தானத்தின் பொருட்டு ப்ரணயஸம்போகாநுபவம் என்றும், தர்மப்ரதானமாக காமரஸமிருந்தால், இப்படிச் சிரிப்புக்கிடமே வராது. மற்றோர்

ஹாஸ்யரஸம் வராது. 'ஸமயம்' என்பது வாதஸமயத்தையும், தர்சனமென்னும் ஸமயத்தையும் சொல்லும். இங்கே குத்ருஷ்டிகளாயிருப்பவருடைய ஸமயங்கள் ஸபையில் வாதத்தில் கீழே விழவே விவேகிகளுக்குப் பரிஹாஸத்திற்கு இடமாகும் என்பது கருத்து. (9)

பஹூந் விதத்யுபகாராந்
குப்த்யா துரிதம் ப்ரகாச்ய பிதததி ச ।
ஸுஹ்ருதி விஹிதா ஹிதமதி:
யந்ந ப்ரத்யுபகரோதி ந தத் ॥ ॥ ௯ ॥

புஹூவிதத்யுபகாராந்
குப்த்யா துரிதம் ப்ரகாச்ய பிதததி ச ।
ஸுஹ்ருதி விஹிதா ஹிதமதி:
யந்ந ப்ரத்யுபகரோதி ந தத் ॥ (9)

(ப-ரை) உபகாராந் [உபகாராந்] - உபகாரங்களை பஹூந் [பஹூந்] - அநேகக் கணக்காக, குப்த்யா [குப்த்யா] - தெரியாமல், (மறைவாக), விதததி [விததி] - செய்துகொண்டும், பஹூ [பஹூ] - அநேக, துரிதம் [துரிதம்] - அபராதத்தை, (பாபத்தை), குப்த்யா [குப்த்யா] - ரஹஸ்யமாய், ப்ரகாச்ய [ப்ரகாச்ய] - தெரியப்படுத்தி, பிதததி ச [பிததி ச] - மறைப்பவருமான, ஸுஹ்ருதி [ஸுஹ்ருதி] - ஸ்வபாவ ஸுஹ்ருத்தான ஈச்வரனிடமும் (குருவினிடமும்) (தோழனிடமும்), விஹிதா [விஹிதா] - செய்யப்பட்ட, ஹிதமதி: [ஹிதமதி:] - ஹிதபுத்தியானது, ந ப்ரத்யுபகரோதி யத் [ந ப்ரத்யுபகரோதியத்] - ப்ரத்யுபகாரத்தைச் செய்யாமலிருப்பதென்பதற்குக் காரணம், ந தத் [ந தத்] - (தக்க) ப்ரத்யுபகாரம் என்பது இல்லாததே. அல்லது, விஹிதாஹிதமதி: [விஹிதாஹிதமதி:] (விஹித அஹிதமதி:) - ப்ராதிகூலமென்கிற புத்தியைப் பண்ணி, ந ப்ரத்யுபகரோதி யத் [ந ப்ரத்யுபகரோதி யத்] - ப்ரத்யுபகாரம் செய்கிறதில்லை என்பது, ந தத் [ந தத்] - அது நிபுணமன்று. அல்லது, விஹிதாஹிதமதி: யந்ந ப்ரத்யுபகரோதி [விஹிதாஹிதமதி: யந்ந ப்ரத்யுபகரோதி] - ப்ரத்யுபகாரம் செய்யநினைத்தால் அவருக்குக் கஷ்டம்

வருவதை அபேக்ஷிப்பதால் அவருக்கு அஹிதமென்று எண்ணி ப்ரத்யுபகாரசிந்தை செய்யாவிடில், அது ப்ரத்யுபகாரம் செய்யாமை என்றும் குற்றமாகாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்:— ஈச்வரன் தன்னுடைய ஸஹஜமான கருணையினால் நமக்குத் தெரியாமல் எத்தனையோ உபகாரங்களைச் செய்துகொண்டேவருகிறான். நாம் பாபங்களைப் பண்ணும்பொழுது உள்ளே அந்தராத்மாவாக இருந்துகொண்டு பிறருக்குத் தெரியாமல் ஏகாந்தமாக நமக்கு மட்டும் பாபமென்று தெரியும்படி பிரகாசிப்பித்து, இதைச் செய்யாதே என்று எச்சரிக்கிறான். ஆனால் அப் பாபங்களைப பிறர்களுக்குப் பிரகாசப்படுத்தாமல் மறைத்து வைத்து இவன் அநுதாபப்படும் காலத்தில் அடியோடு அவற்றை மன்னித்து மறையச் செய்கிறான். இவ்வளவு ஸுஹ்ருத்தான ஈச்வரனிடம் அநுகூலபுத்தி பண்ணும் ஆச்ரிதன் அவனுக்கு ப்ரத்யுபகாரம் என்னதான் செய்யக்கூடும்? எது செய்யினும் அவ்வுபகாரங்களுக்குக் கைம்மாறாகாதென்று கை வாங்குவதைத் தவிர வேறென்ன நாம் செய்யக்கூடும் என்று எண்ணலாம். இப்படியே ஆசிரியர்களும் நமக்கு எல்லையற்ற உபகாரங்களைச் செய்துகொண்டு, நம்முடைய அநேக குற்றங்களையும் வெளியில் பிறருக்குப் பிரகாசப் படுத்தாமல் மறைத்து நமக்கு மட்டும் ஏகாந்தமாகப் பிரகாசப்படுத்தி நம்மைத் திருத்துகிறார்கள். குருக்கள் ஏதாவது தவறினால் ரஹஸ்யத்தில் அவர்களுக்கு அதை விஜ்ஞாபிக்கவேண்டியதுபோல, எல்லையற்ற கருணையினால் சிஷ்யரான நம்மை ஏகாந்தமாகத் திருத்துகிறார்கள். இப்படிக்கொத்த பரமஸுஹ்ருத்துக்களான ஆசிரியர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? அவருக்கு "ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்" என்று நினைத்து அவர்விஷயத்தில் "போற்றி உகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்கு புகழ்ச் சாற்றிவளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே" என்றபடி இருக்கப் பிராப்தம். இப்படி உபகரிக்கும் ஈச்வரனிடமும் ஆசிரியர்களிடமும் பிரதிகூலபுத்தியைப் பண்ணி அவர்களிடம் கிருதஜ்ஞதை பாராட்டாதவர் ஒரு பொருளல்லர். ஒரு பொருளாக மதிக்கத் தக்கவரல்லர். முன் பாதியில் சொன்னபடி ஆசிரியர்களுக்கு உபகரிக்கும் ஸுஹ்ருத்தான சிஷ்யரிடத்தில் பிரதிகூலபுத்தி பண்ணி அவனுக்கு உபகாரம் செய்யாத ஆசிரியரும் ஒரு பொருளாக மதிக்கத் தக்கவரல்லர். 'ஹநுமானே! நீர் எனக்குச் செய்த உபகாரம் என்னுள்ளேயே ஜரித்துவிடட்டும். (உபகாரம் செய்தவருக்கும்) ப்ரத்யுபகாரம் செய்ய எண்ணுகிறவன் அவ்வுபகாரிக்கு விபத்து வரவேண்டும் என்று ப்ரார்த்திப்பவனாவான்' என்று ராமன் வார்த்தையை நினைத்துப் பொருள்கொள்ளுவதும் ஸ்வரஸம். (9)

தாநு வ்ரந்தி ஹந்த ஶாந்தம்
யேப்ய: ஸித்யேயுரஸிதவர்த்மாந: ।
அகணிதநிஜப்ரணாஶை:
கிமாஶ்ரயாஶைரநாஶ்யமிஹ ॥ ॥ ௧௦ ॥

தாந் க்நந்தி ஹந்த சாந்தம்
யேப்ய: ஸித்யேயுரஸித வர்த்மாந: ।
அகணிதநிஜப்ரணாசை:
கிமாச்ரயாசை: அநாச்யமிஹ ॥ (10)

(பதவுரை) யேப்ய: [யேப்ய:] - எவரிடமிருந்து (எங்கிருந்து), அஸிதவர்த்மாந: [அஸிதவர்த்மாந:] - கெட்ட மார்க்கத்தில் செல்லுமவர் (கருப்பான புகையையுடைய நெருப்புகள்) ஸித்யேயு: [ஸித்யேயு:] - உண்டாகின்றனரோ (ஸித்தியைப் பெருகின்றனரோ), தாநு [தாந்] - அந்த (தங்களுக்கே மூலமான) ஆச்ரயங்களை, க்நந்தி ஹந்த [க்நந்தி ஹந்த] - அநியாயமாய் அழிக்கிறார்கள், ஶாந்தம் [சாந்தம்] - இவர்கள் கொடிய செய்கையைப் பேசுவதுகூட பாபமென்றுபேசாமல் இருப்பது உசிதம். இவர்களைப்பற்றிப் பேசிய பாபம் ஈச்வரகிருபையால் சாந்தி அடையவேண்டும், அகணிதநிஜப்ரணாஶை: [அகணிதநிஜப்ரணாசை:] - தங்களுக்கே நாசம் வருவதையும் கவனியாமல், ஆஶ்ரயாஶை: [ஆச்ரயாசை:] - தங்களுக்கு மூலமான ஆச்ரயங்களையே த்வம்ஸம் செய்பவர்களால் (பக்ஷிப்பவர்களால்), இஹ [இஹ] - இங்கே, கிம் அநாஶ்யம் [கிம் அநாச்யம்] - எதுதான் நாசம் செய்யப்படமாட்டாது (எதுதான் பக்ஷிக்கப்படமாட்டாது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— உபகாரம் பெற்றவர்களிடம் ப்ரத்யுபகாரம் செய்யாதவர் ஒரு பொருளாகாரென்றார்.

தன்னையே ஒரு ஆளாக்கி தன் ஸித்திக்கே மூலமான உபஜீவ்யர் களுக்கு (ஆச்ரயமானவர்களுக்கு) தாங்களே த்ரோஹியாகி அவர் களைக் கொல்லும் கொடியவர்களை என்னென்று சொல்லலாம். நெருப்பு இப்படி தன் ஸித்திக்குக் காரணமான ஆச்ரயத்தையே பக்ஷித்து த்வம்ஸம் செய்து, அதோடு தானும் நாசம் அடைகிறது. மரங்கள் ஒன்றோடொன்று உரசி அதிலிருந்து நெருப்புண்டாகும். அந்நெருப்புக்கு மூலகாரணமும், அது எரிவதற்கு ஆச்ரயமும் மரங்கள். அம்மரங்களையே விறகாகக்கொண்டு நெருப்பு எரியும். விறகன்றியில் எரியாது. தனக்கு உபஜீவ்யமான மரங்களையே அதுபக்ஷித்து மரங்களையும் நாசம்செய்து விறகு இல்லாததினால் தானும் நாசம் அடைகிறது. நெருப்பிற்குப் புகையும் இருப்பதால் நெருப்பை கருப்புமார்க்கமுள்ளது (க்ருஷ்ணவர்த்மா, அஸிதவர்த்மா) என்று சொல்லுவர். 'ஸித' என்றால் 'வெளுப்பு'— 'அஸித' என்றால் 'கருப்பு'. அந்த நெருப்பின் க்ருஷ்ணமார்க்கத்தையே மூலாச்ரயத்திற்கே சத்ருவாகும் கொடியவர்கள் அனுஸரித்தவர். நெருப்பு எப்படி தன்னுடைய ஆச்ரயபக்ஷணம் என்னும் கொடிய செய்கையால் தானும் உடனே தத்க்ஷணமே அக்கொடிய செய்கையின் பயனாக நாசத்தை அடைகிறதோ, அப்படியே உபஜீவ்யருக்கு விரோதம் செய்பவர் உடனே தாமும் நாசமடைவார். அத்யுத்கடமான பாபங்களுக்கு உடனே தண்டனை கிடைக்கும்; இங்கேயே கிடைக்கும். விஷவ்ருக்ஷமாயினும் அதை வளர்த்தவர், அதை தானே வெட்டலாகாதென்பர். ஒருவரால் வளர்க்கப்பட்டவர் வளர்த்தவரையே த்வம்ஸம் செய்வதென்பது நியாயமாகுமோ ? உபஜீவ்யமான ப்ரமாணங்களை நாசம்செய்வது உசிதமல்ல என்பதும் இங்கே ஓர் கருத்து. கல்யாணகுணங்களுடைய ஈச்வரனை உபாஸித்து அவரனுக்ரஹத்தைப் பெறுவதாலும், வேதங்களையோதி தத்வஜ்ஞானத்தைப் பெறுவதாலும் மோக்ஷத்தை அடைய விரும்புகிறவர் உபஜீவ்யமான வேதங்களை அஸத்யமென்று மறுதளிப்பதும், தமக்கு அநுக்ரஹம் செய்யும் கல்யாணகுணங்களுடைய ஈச்வரன் உண்மையில் இல்லையென்று மறுதளிப்பதும் உபஜீவ்யவிரோதமென்னும் கொடிய தோஷமென்பது கருத்து. அஹமர்த்தமென்கிற தன்னுடைய நாசத்தையும் எண்ணுகிறார்களில்லை. இதெல்லாம் நிபுணமல்ல. (10)

𑌨𑌵𑌦𑌳𑌪𑍁𑌟𑍇 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌾 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌭𑍋𑌰𑌪𑌿 𑌤𑌲𑍍𑌪𑌧𑍀𑌃
𑌨𑌟𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑍋 𑌯𑌸𑍍𑌯𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌶𑍍𑌰𑌮𑌂 𑌶𑌮𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑍇।
𑌵𑌟𑌵𑌿𑌟𑌪𑌿𑌨𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌕𑍂𑌰𑌾𑌨𑌨𑍁𑌤𑍍𑌕𑌟𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌨𑍍
𑌸𑍍𑌥𑌪𑍁𑌟𑌚𑌟𑌕𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑍀 𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣𑌮𑍀𑌕𑍍𑌷𑌤𑍇॥

நவதளபுடே கல்ப்யா யஸ்ய ப்ரபோரபி தல்பதீ:
நடபரிப்ருடோ யஸ்யாதஸ்தாத் ச்ரமம் சமயிஷ்யதே ।
வடவிடபிநஸ்தஸ்யாங்கூராநநுத்கடபல்லவாந்
ஸ்தபுடசடகாபேக்ஷீ பிக்ஷு: ப்ரதிக்ஷண மீக்ஷதே॥

(பதவுரை) 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌟𑌵𑌿𑌟𑌪𑌿𑌨𑌃 [யஸ்ய வடவிடபிந:] - எந்த ஆலமரத்தினுடைய, 𑌨𑌵𑌦𑌳𑌪𑍁𑌟𑍇 [நவதளபுடே] - இளம் இலையில், 𑌪𑍍𑌰𑌭𑍋𑌰𑌪𑌿 [ப்ரபோரபி] - ஜகத்பிரபுவான ஈச்வரனுக்கும், 𑌤𑌲𑍍𑌪𑌧𑍀𑌃 [தல்பதீ:] - படுக்கை என்கிற புத்தி, 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌾 [கல்ப்யா] - ஏற்படக்கூடியதோ, 𑌯𑌸𑍍𑌯 [யஸ்ய] - எதனுடைய, 𑌅𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 [அதஸ்தாத்] - கீழே, 𑌨𑌟𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑌃 [நடபரிப்ருட:] - நடராஜரென்னும் பிரபு, 𑌶𑍍𑌰𑌮𑌂 [ச்ரமம்] - சிரமத்தை, 𑌶𑌮𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 [சமயிஷ்யதே] - போக்கிக்கொள்ளுவரோ, 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌟𑌵𑌿𑌟𑌪𑌿𑌨𑌃 [தஸ்ய வடவிடபிந:] - அந்த ஆலமரத்தினுடைய, 𑌅𑌨𑍁𑌤𑍍𑌕𑌟𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌨𑍍 [அநுத்கடபல்லவாந்] - இளங்கொழுந்துகளையுடைய, 𑌅𑌙𑍍𑌕𑍂𑌰𑌾𑌨𑍍 [அங்கூராந்] - இலை முளைகளை, 𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌃 [பிக்ஷு:] - ஸந்யாஸியாயிருப்பவர், 𑌸𑍍𑌥𑌪𑍁𑌟𑌚𑌟𑌕𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑍀 [ஸ்தபுடசடகாபேக்ஷீ] - நடுவில் பள்ளமுள்ள தொன்னையாக உதவும் இலையாகுமோவென்று, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌣𑌂 [ப்ரதி க்ஷணம்] - ஒவ்வொரு க்ஷணமும், 𑌈𑌕𑍍𑌷𑌤𑍇 [ஈக்ஷதே] - பார்த்துக்கொண்டே காக்கிறார் (ஆலிலை வர்ஜ்யம் - நிஷித்தமென்பதையும் கவனிப்பதில்லை).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— குடும்பத்தையும் வீடுவாசலையும் விட்டுவிட்டு ஸந்யாஸாச்ரமத்தைக் கைப்பற்றி கிராமைகராத்ரமாகத் திரிந்து பிக்ஷாடனம் செய்யவேண்டியவரும் ஈச்வரனை ஸர்வதா த்யானித்துக்கொண்டும் அவன் நாமங்களை உச்சரித்துக்கொண்டும், சாஸ்த்ரநிஷித்தங்களைச் செய்யாமலும் ஸ்வப்ரயோஜனத்தை அடியோடு கருதாதவராயும் இருக்கவேண்டியது கடமை. ஸந்யாஸிகள்கூட எப்பொழுதும் தநத்தை மேல்

மேலும் சேகரிக்கவே யத்தினப்படுகிறார்களென்று ஸங்கல்ப ஸூரியோதயத்தில் ஸ்வாமி சோகத்தைக் காட்டினார். வடவிருக்ஷத்தையும் பசுமையாய் தழைந்திருக்கும் அதன் இலைகளையும் பார்த்தால் வைஷ்ணவஸந்யாஸிகளுக்கு "பாலனாய் ஏழுலகுமுண்டு ஆலிலைமேல் அன்னவசம் செய்யும் அண்ணலாரான" பகவானுடைய ஞாபகம் வந்து கண்ணும் கண்ணீருமாக அந்த ஆனந்த நினைப்பிலேயே முழுகவேணும். சைவஸந்யாஸியாக இருந்தால் '[illegible]' என்றபடி அழகிய தக்ஷிணாமூர்த்தி வடவிருக்ஷத்தினடியில் குளிர்ந்த நிழலில் தம் சிரமத்தைப் பரிஹரித்துக்கொண்டு சிஷ்யர்களுக்கு ஞானோபதேசம் செய்ததை நினைத்தும் தக்ஷிணாமூர்த்யஷ்டகத்தையநுஸந்தித்தும் ஆனந்தப்படுவதுமுசிதம். ஆலிலையைப் பரித்து சாப்பிடுவதற்குப் பாத்ரமாக்கி எச்சலாக்க ஆஸ்திகர் நினைப்பரோ? ஈச்வரன் விஷயமான சிந்தையை செய்யவேண்டியது உசிதமாயிருக்க எல்லாவற்றையும் துறந்துவிட்டேன் என்னும் துறவியும் தொன்னைக்குதவக்கூடிய இலையாக ஆலந்துளிர் வளருமோவென்று முளைவிடுவதுமுதல் அங்குரங்களைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருக்கிறார்களே என்கிற சோகம். ஈச்வரனை நினைக்க வேண்டிய ஸாமக்ரிகளைப் பூர்ணமாகப் பார்த்தும் சாஸ்திரநிஷேதம் தெரிந்தும் நாஸ்திக்யத்தைப்பற்றி ஸ்வார்த்தபரராகவே இருக்கிறார்கள். துறவிக்கு நாஸ்திகத்வம் நிபுணமாகுமோ? சாஸ்திரநிஷித்தபோகத்திலாசையிருந்தால் ஏன் இப்பக்ஷத்திலேயே இருக்கக்கூடாது? இரண்டு கைகளையும் கூட்டி அஞ்சலியால் தண்ணீர் அருந்துவது ஸுலபமாயிருக்க ஏன் பாத்திரங்களைத் தேட வேண்டுமென்றார் சுகர். ஒரு பிரஸிருதி (கையளவு) ஜலம் போதாதா தாஹத்தை சமநம் செய்ய என்று வைராக்யபஞ்சகம். 'பாணித்வயத்தை உண்ணும் பாத்திரமாக அமைத்துக்கொண்டு கௌபீநம் மட்டும் தரிப்பவர் பாக்யவான்கள்' என்று யதிபஞ்சகம். ஸந்யாஸிகளாகியும் இப்படியிருப்பது அநிபுணமே. கவலையின் நீட்டத்தைக் காட்ட 'அங்கூர' என்ற நீட்டிய ப்ரயோகம். காவ்யங்களில் வாசிக்கும் ரஸிகரொருவருக்கும் உத்வேகம் இல்லாமல்கூடிய மட்டும் தாடஸ்த்யத்தைக் கைப்பற்றவேண்டுமென்று நியமமுண்டு. 'யத்ரோத்வேகோ ந தீமதாம்' என்று நியமம். ஸ்வமதத்தை விட வேண்டியதில்லை; பிறருக்கு வீணே உத்வேகமுண்டாக்கக்கூடாது.

அம்மா கோதாய்! பெருமாள் திருமார்பில் ஸர்வகாலத்திலுமுள்ள வைஜயந்தியென்னும் வநமாலையானது, எப்பொழுதும் பரிமளத்தோடும் ஸந்தோஷமலர்ச்சியோடும் செவ்வியோடும் பெருமாள் திருமார்பை அலங்கரிப்பதில் ராகத்தோடும் ச்ரேஷ்டகுணங்களோடும், ஸௌகுமார்யமெனும் மார்த்தவத்தோடும் கூடி பெருமாள் திருமார்பிலேயே வஸித்துக்கொண்டு மனத்துக்கினியதாயிருந்தாலும், அது அவர் திருமுடியிலுள்ள கிரீடத்தையடைந்த உன் சிரோமாலையால் கீழாக்கப்பட்டதே.

அவ— (1) என்னை ஈச்வரீயென்னலாமோ? எனது உயிரும் அம்சியுமான பெரிய பிராட்டியாரல்லவோ ஈச்வரீ. அம்மா உன்னை ஈச்வரீயென்று அழைக்க என்ன தடை? மோக்ஷத்தை அளிக்கும் முகுந்தனான ஸர்வேச்வரரின் கிரீடத்தை உன் சிரோமாலை யடைந்ததே. உன் சிரஸுக்கு ஈச்வரகிரீடம் கிடைத்தாலென்ன? உன் சிரோலங்காரமான மாலைக்கு அது கிடைத்தாலென்ன? (2) ஆண்டாள் சரித்ரத்திலும் திருக்கல்யாணத்திலும் மாலைக்குத்தான் ப்ராதான்யம். அநேகம் ச்லோகங்களில் இங்கே கோதைமாலையின் ஸ்துதி மாலை. இது சூடிக்கொடுத்த மாலையின் துதியென்னவேணும். அந்த மாலைதானே இம்மிதுனத்தைச் சேர்த்துவைத்த கடகவஸ்து. புருஷகாரத்திற்கும் புருஷகாரமாயிற்று. கடகர் சிறப்பிலும் மிக்கதுண்டோ. பரமான ப்ரஹ்மவித்யையை ப்ரதிக்ஞையுடன் பேச ஆரம்பித்த முண்டகோபநிஷத்து மேலே "ஆகையால் க்ஷேமத்தை விரும்புகிறவன் ஆத்மக்ஞனை ஆசிரியனையல்லவோ அர்ச்சிக்கவேண்டும்' என்றது. 'தஸ்மாத்' என்று ஹேதுபுரஸ்ஸரமாய்ப் பேசுவதோடு த்ருப்தியில்லாமல் 'ஹி' என்று ப்ரஸித்தியையும் ஹேதுவையும் காட்டும் பதத்தையும் சேர்த்துக்கொண்டது. 'தஸ்மாத் ஆத்மஜ்ஞம் ஹி அர்ச்சயேத் பூதிகாம:'. மதுரகவி காட்டும் மதுரமார்க்கம் நல்வழியான தொல்வழி. (3) முன் ச்லோகத்தில் 'நீ சூடிய மாலை வந்து திருமுடியில் ஏறி கிரீடம் பெற்றதும், வைஜயந்தியில் மொய்த்துக்கொண்டிருந்ததை விட்டு, உன் மாலையின் பரிமளாதிகளால் மேலே இழுக்கப்பட்டு அங்கே சூழ்ந்து சுழன்று ஆடிப் பாடுகின்றன' என்றார். புதிதாக கிரீடமாலைக்கு வந்தால் வரட்டும்; கையில் கிடைத்து ஸித்தமான உத்தமமாலையாகிய வைஜ

யந்தியை அலக்ஷ்யம் செய்து தாழ்வாக்குமோ ? இது என்ன பக்ஷ பாதப்பேச்சு; பொய்த்துதி ? இதற்கும் பதில் கூறுகிறார்.

கோதே— நீ பாமாலை பாடிக்கொண்டே பூமாலை தொடுத்துக் கட்டிச் சூடிக்கொடுத்தாய். உன் தோழிகளும் ப்ரஜைகளுமான உன் தோட்ட வண்டுகள் உன் பூமாலையைச்சுற்றி ஆடிப் பாடிவந்தன; உன்னை அநுகரித்தன.

வைஜயந்தீ— வநமாலையானது பஞ்சபூதங்களையும் அபிமானிக்கும் நித்யஸூரியான சேதநதத்துவம். இப்படிக்கு உத்க்ருஷ்டமான சேதநமாலை உன் பூமாலையால் ஜயிக்கப்பட்டது. பிருந்தாவனத்து கோபாலனுக்கு இதுவே திருமார்புக்கு அலங்காரம். ஒருகால் குந்துமணிமாலையும் சேரலாம்.

ஸதா— எப்பொழுதும்.

ஆமோதவத்யபி— பரிமளம், ஸந்தோஷவிகாஸம். சேதநமான அபிமானிதேவதையானதால் ஸந்தோஷமும் உண்மையாகும்.

ஹ்ருதயங்கமாபி— ஹ்ருதயதேசத்திலிருப்பது, ஹ்ருதயத்துக்கு இனியதே.

ராகாந்விதாபி— வாடாத மாலை புஷ்பராகம் மாறுவதேயில்லை. திருமார்பில் ராகம் குறைவதேயில்லை. திருமார்பில் ராகமில்லாவிட்டால் இளப்பம் செய்யக் காரணமேற்படலாம்.

லலிதாபி- மாதுர்யஸௌகுமார்யங்கள் குறைவதேயில்லை.

குணோத்தராபி— புஷ்பங்களின் உயர்த்தி குறையாவிடினும் மாலையின் நார்கள் (குணங்கள்) கெடுகின்றனவோவென்றால், நார்கள் ஸர்வோத்தரமாகவேயுள.

மௌளிஸ்ரஜா— ஓர் குறைவுமில்லையென்றால், கீழாவதற்குக் காரணம்தானென்ன ? வைஜயந்தீ பெருமாள் திருமுடியிலும் ஏறவில்லை, உன் மௌளியிலும் ஏறப்பெறவில்லை. இந்த மாலை உன்மௌளியில் சூடப்பட்டுப் பெருமாள் முடியையும் சூடுகிறது. இந்த மாலை ஈச்வரீ ஈச்வரர் இருவர் முடியிலும் ஸம்பந்தம் பெறுறது. ஸ்தானத்தால் உயர்த்தி பெற்றதல்லவோ. மற்ற தாரதம்யத்தை நாம் நினைக்கவேண்டாம், பேசவேண்டாம். மௌளி உத்தமாங்கமல்லவோ, மார்புக்கு உயர்ந்ததல்லவோ?

தவ— ஈச்வரியான உன் மௌளி சூடியது, அங்கிருந்து.

முகுந்தகிரீடபாஜா— பெருமாள் திருமேனியிலேயேயல்லவோ ஸ்தானங்களின் உத்தமத்வமும் அதமத்வமும் காட்டவேணும். முகுந்தன் மோக்ஷப்ரதன்; ஸர்வேச்வரன்தான் மோக்ஷப்ரதன். அவன் கிரீடத்தில் சூடப்பட்டது இம்மாலை, கிரீடஸம்பந்தம் உத்தமமல்லவோ. மாலைகளுக்குள் ஆதிராஜ்யஸூசகம் அந்த ஸம்பந்தம்.

அதரிதா— கீழாய்ச் செய்யப்பட்டது. திருமுடியில் கிரீடத்திலுள்ள மாலைக்குக் கீழேயுள்ளதுதானே திருமார்புவநமாலை.

பவதி கலு— ஆகிறது அல்லவா? இது எல்லோரும் அறியும்படி ஸ்பஷ்டம்தானே. இங்கே ஓர் ரஸமுண்டு. பகவத் கைங்கர்யரஸிகர் மற்றெல்லோருக்கும் தாழ்மையையே ஆசைப்படுவர். தாழ்மை கிடைத்ததும் 'இன்றுதான் பிறந்தோம்' என்கிற நினைப்பு வருவதை 'அதரிதா பவதி'என்று சேர்த்துப்பணிப்பால் விளக்குகிறார். கோதை சூடிய மாலை சேதனமல்லாததால் அதற்கு அந்தத் தாழ்மையாசையில்லை. மேலும் பெருமாளாக அதை தலையில் சூடிவிட்டார். நித்யஸூரியான வைஜயந்தி தேவதைத் தாழ்மையையே ஸத்தையாக மதித்தார். (15)

த்வந்மௌளிதாமநி விபோ: சிரஸா க்ருஹீதே
ஸ்வைரம் ப்ரகல்பிதஸபீதிரஸப்ரமோதா: ।
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விதது: ஸ்வயம் தே
ஸ்வாயம்வரம் கமபி மங்களதூர்யகோஷம் ॥ ௧௬ ॥

த்வங்மௌளிதாமநி விபோ: சிரஸா க்ருஹீதே
ஸ்வச்சந்தகல்பிதஸபீதிரஸப்ரமோதா: ।
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விதது: ஸ்வயம் தே
ஸ்வாயம்வரம் கமபி மங்களதூர்யகோஷம் ॥ (16)

(ப-ரை) விபோ: - விச்வப்ரபுவினுடைய, சிரஸா - சிரஸினால், த்வந்மௌளிதாமநி - உன் சிரஸை அலங்கரித்தமாலை, க்ருஹீதே - க்ரஹிக்கப்பட்டபோது, ஸ்வைரம் - தங்கள் ஸ்வேச்சையாக, (இஷ்டப்படிக்கெல்லாம்), கல்பித - செய்த, ஸபீதிரஸ-ஸஹபானரஸத்தால்"(எல்லாம்கூடி தேனைப்பானம்செய்து) ப்ரமோதா: - அதிகஸந்தோஷத்தோடு கூடியனவாக, மஞ்ஜு

நா: - இனிய சப்தத்தோடே, மயுலிஹ: - தேனை ஆஸ்வாதிக்கும் வண்டுகள், ஸ்வயம் - தாமாகவே, (ஒருவரும் சொல்லாமல்) ஸ்வாயம் வரம் - ஸ்வயம்வரமான விவாஹப்ரகரணத்திற்குத் தக்கபடி, கூவலி - வர்ணனத்திற்கு அடங்காத மாதுர்யத்தை உடைய ஓர் விசித்ரமான, மஜ்கலதுர்யகோஷம் - மங்கள வாத்யஸேவையை, விதயுஃ-செய்தன. (விதித்துக்கொண்டன).

நீ உன் சிரஸில் சூடிய மாலை ப்ரபுவின் சிரஸால் ப்ரதிக்ரஹிக்கப்பட்டபோது, தேன் வண்டுகள் தங்கள் இஷ்டப்படிக்கெல்லாம் வேண்டியமட்டும் ஸஹபானம் செய்து அந்த ரஸத்தால் களித்து இனிய சப்தத்தோடே உன் ஸ்வயம்வரத்தில் ஸ்வயமாக ஒரு விலக்ஷணமான மங்களவாத்யகோஷம் செய்தன.

அவ:— (1) அநந்தநாகரைப்போல வண்டுக்கூட்டங்கள் தங்கள் சரீரத்தாலேயே குடையாயின, கருடனைப்போல விசிறியுமாயின என்றார் 14-இல். 'வைஜயந்தியை வண்டுகள் விட்டதை'ப் பேசினதை உபபாதிக்க முன் சுலோகம் வந்தது. அது முடிந்ததும், மறுபடியும் வண்டுகள் ஆனந்தப்பட்டு ஸ்வயம் செய்யும் வாத்யகோஷகைங்கர்யத்தை ஸாதிக்கிறார். (2) ஸ்வயம்வரத்தில் மங்களவாத்யகைங்கர்யமும் ஸ்வயமாக வண்டுகளால் வரிக்கப்படுகிறது. எல்லாம் இங்கே ஸ்வயமாகும். வண்டுகள் ஸ்வச்சந்தமாகத் தேனை ஸஹபானம் செய்து களிக்கின்றன. ஒருவரும் அவற்றிற்குத் தேனைப் பானம் செய்யென்று தேனை எடுத்துக் கொடுக்கவில்லை, பரிமாறவில்லை. தங்கள் இஷ்டமாகத் தாமே மாலையில் பெருகும் தேனைப் பானம் செய்கின்றன. இந்த ஸ்வயம்வரத்தில் சேஷர்களான யாவரும் தங்கள் தங்கள் இஷ்டத்தை ஸ்வயமாகச் செய்யலாம். இஷ்டப்படி பணியையும் செய்யலாம்; போகங்களையும் புஜிக்கலாம். பானபோகத்திலும் பணியே மிக்க இன்பம். மிக்க போகம். ஸ்வக்ருஹே கோ விசாரோऽஸ்தி, கஸ்யாஜ்ஞா ஸம்ப்ரதீக்ஷ்யதே என்றார் ஜநகர் ஸீதாவிவாஹத்தில். 'ஸ்வக்ருஹத்தில் யாருக்கு என்ன விசாரம் வேண்டும்? யாருடைய ஆஜ்ஞை எதிர்பார்க்கப்படுகிறது? ஏன் ஸ்வயமாக உங்கள் இஷ்டப்படிக்கெல்லாம் இந்த உத்ஸவத்தில் ப்ரவ்ருத்திக்கலாகாது' என்று ஜனகர் கேட்டார். இங்கே அப்படிப் பேசவே அவஸரம் நேரிடவில்லை. எல்லாரும் ஸ்வயமாகவே விவாஹமங்களத்திற்கு வேண்

டிய கார்யங்களைச் செய்கின்றனர். விவாஹத்திற்கு ம்ருஷ்டாந்நபானாதிகள் அங்கமாகையால் விவாஹபூர்த்திக்காக அதையும் செய்கின்றன. 'விதது:' என்பதால் வாத்யகோஷம் செய்ய ஒன்றையொன்று விதித்தன, கட்டளையிட்டன என்றும் கொள்ளலாம். விதியின் பயன் பிறர்க்கு, பரஸ்மைபதப்ரயோகம்.

கபர்தஸங்கிநீ— நீ உன் கூந்தலில் சூடிய மாலையானது. உன் உத்தமாங்கத்தில் சூடிய மாலை.

விபோ: ஶிரஸா— ப்ரபுவின் சிரஸால். உன் உத்தமாங்கத்தில் சூடிய மாலையைத் தம் உத்தமாங்கத்தில் தரிப்பது தானே இந்த உத்தம ப்ரபுவின் லக்ஷணம்.

ஶிரஸா க்ருஹீதே— "ஶிரஸா ப்ரதிக்ருஹ்ணாதி தேவஸ்ய" என்ற வசனக்ரமத்தை இவர் விடாத ப்ரபுவே. எவர் செய்யும் பூஜையையும் இப்படி சிரஸால் க்ரஹிப்பவர், கோதை சூடிய மாலையை அப்படி க்ரஹிக்காமலிருப்பரோ? தம் ஸ்வச்சந்தமான ஸ்ம்ருதிவசனப்படி ஸ்வயமே சிரஸா க்ரஹித்தார். தம்மையே விதித்துக்கொண்டார். இந்த ஸ்வயம்வரத்தில் பெருமானுடைய சிரஸால் க்ரஹணமும் ஸ்வயம். பெருமானை ஒருவரும் ப்ரார்த்திக்கவில்லை, விதிக்கவில்லை. அவர் ஸ்வச்சந்தமாக அப்படிச் செய்தார். ராகத்தால் செய்தார்; ஸ்வச்சந்தவிதானம். மாலையை சிரஸால் க்ரஹித்தபொழுதே. 'யஸ்ய ச பாவேந பாவலக்ஷணம்'. பாவத்தை இரட்டிக்கும் பாணினிஸூத்ரமும் இந்த பாவப்ரகரணத்தில் பாவத்தோடு சேருகிறது.

ஸ்வயம் ப்ரஸூந மதுலிஹாம் ஸஹஸ்ரகோஷா:— பல்லாயிரம் வண்டுகளாக சிரோமாலையில் பெருகும் தேனை ரீங்காரம் பண்ணிக்கொண்டு ஸஹபானம் செய்யும்போது தடுப்பாரில்லை; ஓட்டுவாரில்லை. கூட்டங்களான வ்யக்திகளுக்கு ஒரேகாலத்தில் அன்னம் இட்டு அவர்கள் புஜிப்பார்கள். பானகாதிகளைக் கூடிப் பானம் செய்வர். இவை ஸ்வச்சந்தமாய்த் தலைமேலேறி அங்கே ஒரே கூட்டமாய்ப் பானம் செய்கின்றன. குமாரஸம்பவத்தில் தன் பேடையான பெண்வண்டை அநுவர்த்தித்துக்கொண்டு ஆண் வண்டு ஒரே குஸுமபாத்ரத்தில் ஸஹபானம் செய்தது என்று காளிதாஸர் வர்ணித்தார். அங்கே பரச்சந்தாநுவர்த்தனமென்னும் தாக்ஷிண்யம் காட்டப்பட்டது. இங்கே எல்லா வண்டுகளும்

ஏககாலத்தில் ஸஹபானம் செய்தன. பானத்தில் ராகமுடையவர் பலபேர் கூடி ஸஹபானத்தை மிகவிரும்புவர். இங்கே இப்பல்லாயிரம் வண்டுகளும் வாத்தியம் ஸேவிக்கின்றன. வாத்யக்காரர் எல்லோரும் கூடி சேர்ந்து விவாஹஸமயத்தில் அன்னபானங்களில் அந்வயிப்பர்.

மதுஸ்வநா:— பானம் பண்ணின தேனிலும் இனிமையான சப்தத்தோடு. தேன் சாப்பிட்ட வாயிலிருந்து சப்தம் தேனாகவே வருகிறது. ராகத்திற்கு எல்லையில்லை; தித்திப்புக்குமெல்லையில்லை.

மதுலிஹ:— தேனை லேஹநம் செய்யும் வண்டுகள். தேனீயின் வாய் எச்சிலில்லை.

விதது: ஸ்வயம்— ஸ்வயமாகச் செய்தன, ஒருவர் ஆக்ஞையால் விதிக்கப்பட்டுச் செய்யவில்லை. ஆக்ஞாகைங்கர்யமல்ல, விதிக்கப்பட்டதல்ல; அநுக்ஞாகைங்கர்யம். ராகத்தால் ஸ்வயம் செய்தன. 'ஸ்வயம் விதானம் செய்தன' என்பதில் ரஸமுண்டு. பிறர் விதித்துச் செய்யவில்லை; தாங்களே ஸ்வயம்விதானம் செய்துகொண்டன. எப்படி தங்கள் ஸ்வச்சந்தத்தால் ஸ்வேச்சையால் தேனைப் பானம் செய்தனவோ, அப்படியே ஸ்வேச்சையால் இக்கைங்கர்யத்தையும் மிக்கக் களிப்போடு செய்தன. 'களமவிரளம் ரஜ்யத் கண்டா: க்வணந்து சகுந்தய:' 'அவ்யக்தமதுரமாக ஓயாமல் ராகம்நிரம்பின கண்டத்தோடு பெண்பக்ஷிகள் சப்திக்கட்டுமே. தேவன் ராமன் ஸ்வயமாக இந்தப் பஞ்சவடிக்கு மறுபடியும் எழுந்தருளியிருக்கிறார்' என்று கோதாவரீதேவி விதித்தாள். அப்படி இங்கு விதிக்க அவஸரமில்லை, ஸ்வயம் ராகமிருப்பதால்.

தே— உன் வண்டுகள். அந்த வண்டுகள். 14-வது ச்லோகத்தில் கொடையான வண்டுகள். உன் ஸ்வயம்வரஸம்பந்தமாக.

ஸ்வயம்வரம்— நீ எப்படி நிரவதிகமான ராகத்தோடு உன் மணாளரை வரித்தாயோ, அப்படியே வண்டுகளும் இந்த மங்களவாத்யஸேவையை வரித்தன.

மௌளிதாம க்ரஹண ஸமயே— மாலை சிரஸால் க்ரஹிக்கப்படும் க்ஷணத்தில் இப்படி வாத்யகோஷம் செய்தன. (16)

விஶ்வாயமாந ரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்ஸ்தலே ச கமலாஸ்தந சந்தநேந ।
ஆமோதிதோऽபி நிகமைர் விபுரங்க்ரியுக்மே
தத்தே நதேந ஶிரஸா தவ மௌளிமாலாம் ॥ १७ ॥

விச்வாயமாந ரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்த்தலே ச கமலாஸ்தநசந்தநேந ।
ஆமோதிதோऽபி நிகமைர் விபுரங்க்ரியுக்மே
தத்தே நதேந சிரஸா தவ மௌளி மாலாம் ॥ (17)

(ப-ரை) விபு: - ப்ரபுவானவர், நாபௌ - உந்தியில், விஶ்வாயமாந ரஜஸா - ஓரோர் தூளியுமோரண்டமாகும் பெருமையையுடைய, கமலேந - தாமரைப்பூவினாலும், கமலாஸ்தந சந்தநேந ச - தாமரையாளின் தனச்சந்தநத்தால், வக்ஷஸ்ஸ்தலே ச - திருமார்பிலும், நிகமை: - வேதங்களால், அங்க்ரியுக்மே (ச) - இரண்டு திருவடிகளிலும், ஆமோதிதோऽபி - வாஸனையேறப் பெற்றும், தவ - உன்னுடைய, மௌளிமாலாம் - சிரோமாலையை, நதேந - வணங்கிய, ஶிரஸா - தலையால், தத்தே - தரிக்கிறார்.

ஓரோர் தூளியும் ஓரோருலகமாக மாறும் பெருமையை உடைய தாமரையாலுந்தியிலும், தாமரையாளின் தனச் சந்தனத்தால் திருமார்பிலும், வேதங்களால் கழலிணையிலும், கந்தம் கமழப் பெற்றும், வணங்கிய தலையால் உன் சிரோமாலையை ப்ரபு தரிக்கிறார்.

அவ:— (1) பெருமாளை விபு என்றார் முன் சுலோகத்தில். இங்கும் விபுவென்கிறார். எல்லா உலகங்களுக்கும் நாயகன், எங்கும் பரந்துளன். அவன் உந்திக் கமலத்தின் ஓரோர் தூளியும் ஓரோர் விச்வமாகும் என்று காட்டி அவன் விபு என்று விளக்குகிறார். (2) வைஜயந்தியைக் காட்டிலும் கோதை சூடிய மாலையின் ஏற்றத்தைக் காட்டினார். இங்கே உந்திக் கமலத்தினிலும் ஏற்றத்தையும், கந்தத்வாரமரன தாமரையாள் தனச்சந்தனத்தி

லும் வேதவாஸனை எறிய திருவடித்தாமரைகளிலும் அதிகவாஸனையைப் பேசுகிறார். (3) உலகநாயகன் உன் மாலைக்கு வணங்கி அதை சிரஸால் தரிக்கிறார்.

விஶ்வாயமாநரஜஸா— தாமரைப் பூவுக்குத் தூளிகளால் வாஸனை. ஓரோர் தூளி ஓரோர் அண்டமாய் விரிவதால். வாஸனை எல்லா அண்டங்களிலும் பரவுவதைக் காட்டுகிறது. வாஸனை எத்தனை தூரம் வீசுகிறதோ, அது அதற்கேற்றம். அகிலமான அண்டங்களும் பரவும் உந்திக் கமலவாஸனையிலும் மேன்மை. (வ்யதிரேகம்).

கமலேந- தாமரையால். ஓரோர் தூளி வாஸனை ஓரோரண்டம் பரவியது. எத்தனையோ தூளிகளையுடைய கமலத்தின் வாஸனைப் பரப்பை என் சொல்வது?

நாபௌ (ஆதௌ ஸ்திதே॑ந)— உந்தியில் வாஸிக்கப் பட்டும்.

கமலாஸ்தநவாஸிதேந— முன்பு கமலத்தின் வாஸனை. இங்கே கமலையின் (தாமரையாளின்) தனவாஸனை கலந்த சந்தன வாஸனை. அச்சந்தனவாஸனையால். பெரிய பிராட்டியாரைத் திருமார்பில் சுமந்துகொண்டு இருவர் திருமார்பிலும் பூசிய சந்தனத்தோடே கோதையைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ள அவள் மாலையை வணங்கிய முடியால் சுமக்கிறார். ஆண்டாள் வாஸனைக்கு ஒப்பாவதற்காக ஸர்வகந்தன் கமலையின் கந்தத்தையும் சேர்த்துக் கொண்டார். பெரிய பிராட்டியாரிலும் மணமேற்றமென்று நேராகப் பேசுவதில்லை. கோதையும் அவளுக்குத் தனம் தோள் போன்ற அவயவமாதலால் அவள் தனத்திலும் கோதைக்கு அதிக வாஸனையைப் பேசினாலும் அதுவும் கமலையின் ஓர் ஸ்தனவிசேஷத்தின் வாஸனைப்பெருமையேயாகுமென்று காட்ட ஸ்தநசந்தனமென்கிறார்.

வக்ஷஃஸ்த॑லே ச— திருமார்பிலும். தாமரையாளும் எங்கும் பரந்த விபுஸ்வரூபம். அவள் வாஸனையுமெல்லையற்றுப் பரவியது. (ஆமோதிதோபி—வாஸிக்கப்பெற்றும்).

189905

॥ ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா விமர்ஶ: ॥

(ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியாவிமர்சம்.)

இவ் விஷயம் மிக ஸூக்ஷ்மம். ஆனால், ரஸவெள்ளம். ஸூத்ரம்போல சுருக்கிப் பேசுவோம்.

1. வாக்யார்த்தாதிகரணத்தில் யாதவப்ரகாசரின் ஸூத்ர யோஜனையைக் கண்டித்து, ஶ்ருதப்ரகாஶிகை 144-இல் " பின்பு எப்படி உங்கள் மதத்தில் சரீரங்களான சிதசித்வஸ்துக்களில் பரமாத்மாவுக்கு பூர்ணத்வம் சொல்லுகிறீர்கள் " என்று தம்மைக் கேட்டுக்கொண்டு, 'ஸர்வாத்மமான பொருளிலிருப்பவர் அங்கே எல்லையற்ற ஷாட்குண்யவிசிஷ்டராக அறிய(ஸேவிக்க)த் தக்கவராயிருப்பதே என்பது எமது பதில். அதையும் சாஸ்த்ரபலத்தாலொப்புகிறோம்; ப்ரத்யக்ஷாதிகளால் அன்று. ஆதலால் ஓர் அநுபபத்தியுமில்லை' என்று நிஷ்கர்ஷம் அருளப்பட்டது. ஸாரஸாரத்தின் பொருள் இவ்வளவேதான். ஸாரஸாரத்தில் இவர் காட்டியவிடத்தில் இதே நிஷ்கர்ஷம் தான். இதை யறிந்து இவரது க்ரந்தத்தில் விளங்கும் இவர் ப்ரதிஸ்லோகம் பூர்ணமயர்வு அறவேணும். ஷாட்குண்யஹேதுகம் ஸர்வநிர்வாஹஶக்தி. 'பரந்த' பாசுரத்தில் 'ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல சக்தியை உடைத்தாயிருக்கை' என்ற இருபத்திநாலாயிரமும், ' ஸர்வநிர்வாஹகக்ஷமமான ஶக்தியோகம்' என்று எம்மாசிரியர் அருளினர்' என்று பதினெண்ணாயிரமும் ஸ்ரீஸுதர்சனரின் நிஷ்கர்ஷத்தையே பேசின. அப் பாட்டில் இப் பூர்ணசக்தியைப் பேசினதின் தொடர்ச்சியாக அடுத்த கரவிசும்பில் ஐந்து பூதங்களிலும் 'வரநவில்திறல்வலி யளிபொறையாய் நின்ற பரன்' என்று உத்க்ருஷ்டசக்திரூபமாகப் பரந்து நிற்பதைப் பாடினார். 'நிரை நிறையாயிரம்' என்று திருவாய்மொழிப் பாசுரங்களில் ஒன்றொன்றின் பூர்ணத்வத்தைப் பாடினார். "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம் மஹத்" ராமாயணம் முழு

3 ... 11 ... 3.5

வதையும் இப்படி குணபூர்ணச்லோகங்களால் க்ருத்ஸ்னமாக (பூர்ணமாக)ச் செய்வேணுக. க்ருத்ஸ்னபதத்திற்கு ஆவ்ருத்தி– க்ருத்ஸ்நம் க்ருத்ஸ்நம் கராவாணீ. இந்த ரஸம் ஈட்டின் திருவுள்ளம். சக்தி, குணம், ஜாதிமுதலிய அத்ரவ்யங்கள் ஒரோர் பொருளிலும் பூர்ணமாயிருக்கலாம். அதற்கு யாதொரு விரோதமுமில்லை. அங்கும் 'ஸர்வம்' என்பது ஸர்வசப்தநிர்வாஹமே. பரிமாணத்தால் வியாப்தி யன்று. பரிமிதஸ்த்ரவ்யவிஷயமும் ஸாவயவமுமான ஜாதிவ்யக்தியும் அத்ரவ்யமான சக்திகுணாதிஸர்வத்துக்குத்தானொட்டும். விபுபரிமாண த்ரவ்யத்தின் ஸர்வவஸமாப்திக்கொட்டாது.

2. ஜாபாலோபநிஷத்தில் அந்தர்யாமிச்ருதியில் 'அவன் ஒவ்வொரு பொருளிலும் உள்ளே ஸஞ்சரிக்கிறான்' என்று பல்கால் படித்துளது. ஸர்வகதனான ஈச்வரனுக்கு அசைதல் ஸம்பவிக்காததால் 'ஸஞ்சரிக்கிறான்' என்பதற்கு 'இருக்கிறான்' என்று பொருள்கொள்ளவேண்டும் என்பது ஸ்ரீஸுதர்சனஸூரியுரை. அபிதவ்யாபாசக்தியைக்கொண்டு முக்யமான ஸஞ்சரணப்பொருளைக் கொள்ளக்கூடாதென்று திருவுள்ளம். த்ராவிடோபநிஷத்ஸாரத்தில் 'நிஷ்கம்பனும் வ்யாபியுமான பரன் உள்ளே ஸஞ்சரிப்பதென்பது விக்ரஹத்வாரமாகவாவது ஸுபாலோபநிஷத்தில்போல அந்தர்யாமியாக அபிஷ்டான த்ருஷ்டத்தாலாவது ஒட்டும்' என்று ஸாதித்தார்.

3. ப்ருஹதாரண்யகபாஷ்யத்தில் நாம் காட்டிய டீகை ஸர்வசக்தி த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டது.

4. ஸித்தாந்தத்திலும் இதே நிஷ்கர்ஷம். 'ஸர்வ ஸ்மிந்'என்பதற்கு என்ன பொருள் நினைத்து அதை மறுக்கிறீர் என்று கேட்டு, 4 விகல்பங்கள்காட்டியுள. "ஒவ்வோர் பொருளிலும் ஸமஸ்தகுணவிசிஷ்டத்வம் என்றா?' என்பது நான்காவது கல்பம். அந்தக் கல்பம் ஸித்தாந்திக்கு இஷ்டம். அதை மறுக்கமுடியாதென்று ஸ்பஷ்டப் பணிப்பு. இதுதான் ஸ்ரீஸுதர்சனர் ஸித்தாந்தமான ஸர்வசப்தார்த்தம். இத்தோடு 'சாஸ்த்ரமோதிய

படியே எங்கும் பகவான் பூர்ணனே' என்று நிகமனம் செய்யப்பட்டது. 'பகவான்' என்பது 'ஷாட்குண்யவிசிஷ்ட'ரென்பதைக் காட்டுகிறதென்று ரஸிகாறிக. ஸ்ரீஸுதர்சனஸூரி நிகமனம் இதென்று ஸூசித்தார். இந்த நிகமனவாக்யத்திற்கடுத்தாற்போல் 'இதனாலேயே நிரவயவத்வம் தொலைந்ததாகும்' என்று ப்ரதிஜ்ஞை. 'இதனாலேயே' என்பதற்கு 'எங்கும் ஸமஸ்தகுணவிசிஷ்டத்வம் என்கிற ஸர்வசப்தத்தினாலேயே' என்று ரத்நபேடிகையின் பொருள். நிகமனம் ஸித்தாந்தத்தைத் தவிர வேறு எதைச் சொல்லும்? 'எங்கும் ஸர்வசப்தாயத நவஸமாப்தி' என்ற மூன்றாவது கல்பமும் இஷ்டமே. 'க்ருத்ஸ்நஸமாப்தி' என்ற இவருடைய 'ஸர்வவஸமாப்தி பக்ஷம்' இரண்டாவது கல்பத்தில் இரண்டாவது கோடி; இதை மறுதளிப்பது தமக்கு இஷ்டப்ரஸங்கமென்றார் ஸித்தாஞ்ஜநகாரர். ஸித்தாந்தத்திற்கும் ச்ருதப்ரகாசிகைக்கும் இவர் பக்ஷம் நிரஸநீயஸர்வபக்ஷமென்பது ஸ்பஷ்டம்.

5. 'க்ருத்ஸ்நப்ரஸக்தி' ஸூத்ரத்தை மறந்து ஸித்தாந்தத்தின் தீர்மானத்திற்கு விரோதமாக ஸர்வவஸமாப்தியைக் கண்டித்து ஒரோரவச்சின்னப்ரதேசமே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல சக்தியுடைத்து என்று ஸாரத்திலுரைத்ததாக இந்தப் பொல்லாச் சிசுவின் அறியாப் பேச்சு. ஸம்ஸ்க்ருதபாஷாவ்யுத்பத்தியும் சாஸ்த்ரவ்யுத்பத்தியும் அடியோடில்லாமல் க்ரந்தம் எழுதும் ஸாஹஸம் நிர்லஜ்ஜத்வமென்னும் குணத்தின் ஸர்வதையைத்தான் விளக்கும். 'நிர்லஜ்ஜத்வமும்' வேஷதாரிக்கு ஒரு ஸம்பத்தென்பர். அந்த ஸம்பத்தால் இவர் க்ரந்தம் ப்ரதிச்லோகம் பூர்ணம்; ப்ரதிவாக்யம் பூர்ணம். அப்படியே நிரூபிக்கவல்லோம்; பொழுதில்லை.

6. 'க்ருத்ஸ்நப்ரஸக்தி' ஸூத்ரத்தின் பொருளும் இவருக்குத் தலைகீழ். 'ச்ருதி சொன்ன நிரவயவத்வத்தை விடவேணும்; அல்லது, ஸர்வம் முழுவதும் ஒரு கார்யத்தில் முடிந்து போகவேணும்' என்று இரண்டு கொம்புகளின் நடுவுக்குள்

வைக்கப் பார்க்கிறார் பூர்வபக்ஷி. ஶ்ருதி சொல்லும் நிரவய வத்வத்தை (ஏகத்வத்தை) ஸ்வாபாவிகமான தர்மமாகக் கொள்ளுகிறோம். ஔபாதிகமான அம்சங்களைக்கொண்டு ஸகலெளரங்களால் தத்தாயஸம்பந்தத்தைச் சொல்லுகிறோம். நிரம்ஶமும் ஔபாதிகமான கம்ஶங்களைக்கொண்டு காயங்களாக ஸ்ருஷ்டமாகலாம், உபாதானமாகலாம், எங்களீஸ்வரனிடமிருந்து ஸ்ருஷ்டி ஸம்பவிக்குமென்று ஶ்ருதிவசத்தைக்கொண்டு கொள்ளுகிறோம். ஏனெனில், ஶ்ருதி நிரம்ஶமென்றும் சொல்லிற்று. உபாதனகாரணமுமாயிற்று என்றும் சொல்லிற்று. ஏதோ ஒரு ப்ரகாரமான கம்ஶங்களின்றியில் உபாதானமாக முடியாது. தன் சக்தியால் ஔபாதிகமான கம்ஶங்களைக் கொண்டு உபாதானத்வ நிர்வாஹமென்பது ஶ்ருத்யந்யதாநுபபத்யா சொல்லுகிறோம். நீர் ப்ரஸஞ்ஜனம் பண்ணினபடி க்ருத்ஸ்னமும் பரிணமிப்பதில்லை'. க்ருத்ஸ்னஸ்வரூபத்தின் பரிணாமப்ரஸங்கம் ஸித்தாந்திக்கு இஷ்டப்ரஸங்கம் அன்றென்பது ஸ்பஷ்டம். இந்த ஆபத்தி அநிஷ்டமானதால், அதை ஶ்ருதியைக்கொண்டு பரிஹரிக்கிறாரென்பது ஸ்பஷ்டம். ரத்நபேடிகையில் "ப்ரஹ்மம் குடம் முதலியதோடு ஸகலெளரத்தால் தான் ஸம்பந்தப்படுகிறது; க்ருத்ஸ்னமாயன்று. ஆகையால் மற்றக் கார்யங்களோடு ஸம்பந்தப்படத் தடையில்லை. இப்படி நீர் சொன்னால் ப்ரஹ்மத்துக்கு ஸாவயவத்வம் வருமே? 'ஸாவயவத்வமிஷ்டமென்றால், நிரவயவத்வஶ்ருதி பாதிதமாகுமே என்று நீர்சொல்லவியலாது, உபாதிப்ரயுக்தமானஸாவயவத்வத்தைத் தானே அங்கீகரிக்கிறோம். அதனால் ஶ்ருதி சொல்லும் "ஸ்வாபாவிகநிரவயவத்வத்திற்கு விரோதமில்லை. அந்தந்த இடத்தின் ஸம்பந்தம்தான் உபாதி. இதில் அந்யோந்யாஶ்ரயமென்னும் தோஷம் சொல்லக்கூடாது. ஶ்ருதிவசத்தைக்கொண்டு நாங்கள் இப்படி ஒப்புகிறோம். நாங்களாகக் கல்பிக்கவில்லை. கல்பனவிஷயத்தில்தான் அது தோஷமாகும்" என்று ஸாதித்ததைக் கவனிக்க. "ஸ்வபக்ஷேசு ஸாம்யாத்" என்று ஸாரா

வலியில் ஸாதித்தபடி ஓர் பதில் ஸூத்ரம். ப்ரயாநகாரணவாதத்தையும் பரிணாமவாதத்தையும் ஶ்ரீபாஷ்யத்தி லெடுக்கப்பட்டது. வைசேஷிகர் வாதம் இந்த காரணத்வவிஷயத்தில் ஸித்தாந்தத்திற்கு நெருங்கியதென்று ப்ரக்ருத்யதிகரண ஶ்ருதப்ரகாசிகை. கொஞ்சமே பேதமுண்டு. அந்த பேதம் ப்ரக்ருதவிஷயத்தில் அன்று. ஸித்தாந்தத்திலும் வைசேஷிகருடைய ஒற்றுமை காட்டப்பட்டுளது.

7. 'ஸகலமேவ' என்ற ஶ்ருதியைக்கொண்டு பிராட்டியை ஈஶ்வரகோடி அன்றென்று தள்ளுவர், விஷ்ணுவான அநந்த ஈஶ்வரவ்யக்திகளை இசையலாமோ ?

8. விருத்தவிஶேஷணங்கள் ஓரே பொருளிலொட்டாது என்று ஜந்மாத்யதிகரணபாஷ்யம். ப்ரஹ்மத்திற்கும் அது கூடாது என்பது அங்கே ஸ்பஷ்டம்.

9. ஆத்மஸ்வரூபத்திற்கு ஸாக்ஷாத்தாக பரிணாமம் சொன்னால், நிர்விகாரத்வஶ்ருதிவிரோதம் வரும், அநித்யத்வம் வருமென்று ஸித்தாந்தயுக்தி. ஸ்வரூபம் க்ருத்ஸ்னமும் ஓர் ஓர் பொருளின் பரிணாமத்தை அடைந்து பரிணமிக்கிறது என்பது இவர் பக்ஷத்தின் பர்யவஸாநம். ஶரீரபரிணாமத்திற்குத் தக்கபடி உள் ஆத்மபரிணாமம் சொல்லுவதாகும். 'ந ச பர்யாயாதப்யவிரோத:' என்னும் ஸூத்திரத்தைக் கவனிக்க. உள்ளேயிருப்பதால் ஸ்வரூபத்திற்கு ஹ்ராஸம் (சுருக்கம்) வருமே. 'வ்ருத்திஹ்ராஸபாக்த்வமந்தர்பாவாத்' என்னும் ஸூத்ரம் இவர் பக்ஷத்தை நிரஸிக்கும். 'ப்ரக்ருதைதாவத்த்வ' ஸூத்ரமும் இவருடைய 'ஸகலஸ்வரூபவ்யாப்தி'பக்ஷத்தைத் தகையும். 'அநந்த'மென்ற ப்ரஹ்மஸ்வருபத்திற்கு இவர் தேசபரிச்சேதமும், வஸ்து பரிச்சேதமும் ஒப்பவேண்டிவரும். "அநேந ஸர்வமித்தம் ஶரீராஸம்பாதிஹ்ய:" என்ற ஸூத்திரத்தில் "இந்த ஒரு ப்ரஹ்மத்தால் ஸர்வஜகத்துக்கும் வ்யாப்தத்வம். ஆயாமஶப்தங்கள் ஸர்வவியாப்தியைச் சொல்லும். தேஶதம் வர்ணநம்

வாலாக்ரேண ஸத்யம்', 'அணுப்ரமிதம்', "நித்யம் விபும் ஸர்வகதம்', 'அணோரணீயாந்' என்னும் ச்ருதிகள் ஒரே ப்ரஹ்மஸ்வரூபத்தால் க்ருத்ஸ்நஜகத்தையும் வ்யாப்தமாவதைப் பேசுகின்றன" என்று பாஷ்ய ரீவஸாரநிர்ணயமும் இவர் பக்ஷத்தைத் தள்ளும். ஸூத்ரமுமப்படியே. இவர் ச்ருதி வஸ்துஸ்வரூபவ்யாப்திபக்ஷத்திற்கு ஆதாரமாகக் கொள்ளும் எல்லா ச்ருதிகளையும் எம்பக்ஷத்திற்கே ஸூத்ராதிகள் விநியோகப்படுத்திவிட்டன. இவரது பக்ஷத்திற்கு மிச்சம் ஒன்றுமில்லை. "க்ருத்ஸ்நப்ரஹ்மாண்டத்தையும் வ்யாபித்துவிட்டு ப்ரஹ்மம் 10- அங்குலம் அதிகம்'. இவருக்கு ஓரணுவில் ப்ரஹ்மத்தின் க்ருத்ஸ்நமும் ஸமாப்தம்.

10. வாக்யாந்வயாதிகரணத்தில் அவஸ்திதஸூத்ரத்திற்கு 'ப்ரஹ்மம் எங்கும் படிபடி தூணாதிகளிலும் பூர்ணமாக அவஸ்திதமானதால்' என்பது யாதவப்ரகாசருரைத்த பொருள். 'ஸத்யேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்' ... ஏகமேவாத்விதீயம் இதி ஸத்தாம் ஸதம்' என்று அவர்பக்ஷத்தின் உபந்யாஸமென்று டீகையில் நிரூபிக்கப்பட்டது. 'பதே ஸத்வஸ்த்வநி ப்ரதம் ஸ்வம் நாஸ்தி ந ஸம்பவதி'...அநந்தபதார்த்தரூபேண ஸத்ய வ்யவஸ்திதஸ்ய! பதார்த்தவிரோதி ஸத் ப்ரதிஷ்டிதிர் வேதி! அவஸ்தித்வாபக்ஷாநாநேவ அநவஸ்தாவிஷேஷ:' என்று ஸ்ரீஸுதர்சனஸூரி ப்ரதிவஸ்துவிலும் ஸ்வரூபஸமாப்திரூபப்ரத்யக்ஷத்தை நிரஸித்துமுதலில் காட்டியபடி எம் பக்ஷத்தை விசதமாயருளிச்செய்தார். இதையறிந்து இவருடைய ச்ருதிவாக்யம்சேஷப்ரத்யக்ஷமான க்ரந்தத்தைப் பற்றி இவரே அநுதபிக்க ப்ராப்தம்.

11. கார்த்தவீர்யத்ருஷ்டாந்தம் யோகைச்வர்யத்தால் உள் ஹ்ருதயத்தைத் தெரிந்து உடனே ஒரு ரூபபரிக்ரஹத்தால் எதிர் நிற்பதைச் சொன்னது. ஸ்வரூபவ்யாப்தி ஏது? "உடனுண்டவர்" என்று முழு ஐச்வர்யத்துக்குத்தான் அந்த த்ருஷ்டாந்தம். அதுவும் இவருக்கு ப்ரதிகூலம்.

12. 'மூவுலகும் நரஸிம்மகர்ப்பம்' என்ற கவிஸிம்ஹோத்ப்ரேக்ஷையால் இந்தஸிம்மம் ப்ரஹ்மஸ்வரூபவைபவத்தைப் பேசுகிறது. எத்தனை விக்ரஹங்களை எடுத்தாலென்ன. ஆதியஞ்சோதி விக்ரஹமே ஸாவயவம். அதிலிருந்து இச்சையால் உதிக்கும் விக்ரஹங்கள் விபுவோ? அவைதான் பரஸ்வரூபமோ? இந்த ஸிம்மம் நிர்ப்ரமாணமான காட்டில்தான் கர்ஜிக்கலாம்.

13. சிலந்தி த்ருஷ்டாந்தமும் இவருக்கு ப்ரதிகூலம். அணுஸ்வரூபத்திற்கு வ்யாப்தியுண்டோ?

14. அசேதநத்திருமேனி அபரிச்சிந்நமோ என்று சொன்னார். மூலமான திருமேனியே ஸாவயவம். அசேதந என்னும் பூதாச்ரயம் விபுவன்று. ஆனால் ஷாட்குண்யபரிபூர்ணம் அங்கு ச்ருதிவசத்தியோக்யமே. ஸம்ஹ்ருதி த்ருஷ்ட்யாவயவி வாத:' என்ற ஸூத்ரத்தின் வ்யாக்யாநங்களைக் கவனிக்க. உபாஸநங்களில் ப்ரஹ்மஸ்துதி செய்கையில் அந்த ஆயதநத்திலேயே அது பெரிய பரிமாணமாயிருக்கிறதென்று அநுஸந்திப்பது விருத்தம், கூடவே கூடாது. உலகமெங்கும் வியாப்தமென்ற மஹிமையை மட்டும் நினைக்கலாம்; நினைக்க வேண்டும்.

15. லோகாசார்யர் இவர்பக்ஷத்திற்கு அநுகூலமாக ஒரு வார்த்தைகூட ஸாதிக்கவில்லை. உண்டாயின் காட்டட்டும்.

16. பகவத்விக்ரஹங்களில் ஆச்சர்யசக்திகளைப் பேசுகிறார். 'விச்வாத்மப்ரதிபு' என்ற தேசிகாசார்யச்லோகத்தையும் ஸித்தியையும் கவனிக்க. பகவத்விக்ரஹாதிகளுக்கு அவரிச்சையால் ஸங்கோசவிகாஸசக்திகளுண்டு. கோடி காணியாகும், காணி கோடியாகும். வாமனர் த்ரிவிக்ரமராவார். இச்சையால் பரிக்ரஹிக்கப்படும் விக்ரஹங்கள் சுருங்கலாம், விரியலாம். ஸ்வரூபம் போல நிர்விகாரமன்று, பரிணாமரஹிதமுமன்று.

17. 'பரந்த தண் பரவை'—இங்கே ஸ்வரூபஸமாப்திப் பேச்சில்லை. "விபுவான ஸ்வரூபம் ஸ்பர்சமில்லாதது; அதற்கு ப்ரதிவாதமேயில்லை. தேவப்ரக்ருதி, மஹத், அஹங்காரம்,

ஆகாசம் முதலிய ஸ்பர்சசூந்யமான பொருள்கள் ஒன்றுக்கொன்று ப்ரதிகாதமன்றி ஒரே தேசத்தில் வியாபித்திருக்கலாம்'' என்பதுஜடபரிச்சேதஸித்தாஞ்ஜனம். விபுஸ்வரூபத்திற்குப்ரதேசமற்ற அணுவால்என்னப்ரதிகாதம்? ப்ரதிகாதாநர்ஹமானதால் ஸங்கோசமேற்படாது, ஆயாஸமுமில்லை. 'அப்ரவிஷ்ட: ப்ரவிஷ்ட இவ பாவ்யதே'. ஸார்வாத்ம்யத்தையும் தேசபரிச்சேதவஸ்துபரிச்சேதங்களில்லாமையையும் அபரிச்சின்னபூர்ணகுணங்களையும் முதல் திருவாய்மொழி விளக்குகிறது. ஒவ்வொரு சிறு பொருளிலும் ஸ்வரூபம் முழுவதும் அடங்குமென்று பேசுவது இங்கே சேராது. இப்பாட்டிலேயே 'நில விசும்பொழிவற' 'பொருடொறும் கரந்தெங்கும் பரந்துளன்' என்று ஒரே பொருள் வடிவடாதிகளால் அவஸ்திதமாகையிலும் அகண்டமாய் உள்ளும் வெளியும் ஸமாப்தமாயிருப்பதன்றோ கருத்து. ப்ரதிகாதமில்லாத ஸ்பர்சசூந்யப் பொருளாதலால் ஓரிடத்திலும் ஸங்கோசமில்லை; நெருக்கடி இல்லை. முதல் பாசுரத்தில் எல்லையற்ற குணத்தைப் பேசி இங்கே முடிவிலும் ஸமஸ்த குணவத்ரவ்யவிசிஷ்டத்தைப் பேசுகிறார் என்பது ரஸம்.

18. "ஸம்பாவித: ப்ரதிஜ்ஞாயாம் பக்ஷ: ஸாத்யேந ஹேதுநா । ந தஸ்ய ஹேதுபிஸ்த்ராணம் உத்பதந்நேவ யோ ஹத:" என்று ப்ரஸித்தப்ராசீனகாரிகை. இவர் ப்ரதிக்ஞை உக்திமாத்ரவ்யாஹதம். "நைகதாபி விருத்தாநாம் உக்திமாத்ரவிரோதத:" உக்திமாத்ரத்தாலேயே இவர் ப்ரதிக்ஞை வ்யாஹதம். இவர் ப்ரதிக்ஞையில் ஓர் பாகம் மற்றொரு பாகத்தைக் கொல்லுவதால் ம்ருதஸர்பமாரணத்திற்கு யத்னம் வேண்டுமோ?

19. பரந்த பாசுரத்தில் ஜாதிவாத திருஷ்டாந்தத்தை ஆழ்வார் ஸாதிக்கவில்லை; ஆறுயிரமும் ஸாதிக்கவில்லை. வேதம் தமிழ் செய்த மாறன் நினைத்தது ச்ருதிஸ்ம்ருதி ஸூத்ரங்கள் சொன்ன ஆகாசத்ருஷ்டாந்தம் - 'ஆகாசவத் ஸர்வகத:' என்று ச்ருதி. 'கோ பலீவர்த:' என்கிற நியாயம்போன்ற ஓர்

நியாயம் இங்கே ஸூசித்துளது. ஸ்பர்சரஹிதமான ஆகாசத்திற்கு வ்யாப்தி ஸௌகர்யத்தில் சின்னது பெரிதென்கிற பேதமில்லையே. குடத்திற்குள்ளிருப்பு நெருக்கடி, அண்டத்திற்குள்ளிருப்பது தாராளமென்று விசேஷமில்லையே. ஜாதிவ்யக்தி த்ருஷ்டாந்தத்தைப் பெரியோர்கள் பேசியிருப்பது உண்டு. 'ஸ்வபக்ஷதோஷாச்ச' என்றதுபோல் பிறர் வாயை மூடத்தான் அதையெடுப்பது. த்ருஷ்டாந்தத்தில் ஸர்வஸாம்யம் விவக்ஷிதமன்று என்பது ப்ரஸித்தம். அதிலிருந்து ஸித்தாந்தத்தை நிர்ணயிக்கமுடியாது. அந்த த்ருஷ்டாந்தமும் இவர் பக்ஷத்திற்கு அநுகூலமன்று. அந்தர்வியாப்தி விசாரம் பிறகு.

'பூர்ணத்வவிசாரம்' இப்பொழுதுதான் எமக்குக் கிடைத்தது. அதை ஸேவித்ததில் ஸிம்ஹாஸநத்தில் ஸம்யோக விசாரத்தில் ஸாதித்த மூன்று பக்ஷங்களில் மூன்றாவதை முக்கியமாகப் பற்றியிருக்கிறது. 1-வது ரத்நபேடிகையிலிருந்து நாம் காட்டிய ஔபாதிகாம்சவத்த்வபக்ஷம். 2-வது ஸ்ரீபுரிசைஸ்வாமி ஈசாவாஸ்யபாஷ்யத்தில்பற்றிய அநாதிஸித்தாம்சவபக்ஷம். (பக்கம் 28.) "ச்ருதி காட்டும் நிரவயவமான ப்ரஹ்மம் அம்சங்களால் பல கார்யங்களாகக் கலந்தும் மிச்ச அம்சம் கலவாமலும் நிற்கையில், அந்த அம்சங்கள் அநாதிஸித்தமாகையால், அநித்யத்வதோஷம் வாராது'' என்பதை ப்ரஸித்தமாகப் பேசியுளது. 'எந்த ப்ரஹ்மஸ்வரூபத்தின் அயுதாயுதைகபாகத்தில் ஜகத்தென்னும் இந்தச் சக்தியானது நிற்கிறதோ, அந்த அவ்யயரை நமஸ்கரிக்கிறேன்' என்று பராசரவசனம். 'மேருவில் ஓரணுப்போல' என்று ஸ்ரீவிஷ்ணுசித்தீயம். வேதார்த்தஸங்க்ரஹம் "228-ல் ஸ்வல்பால்பாம்சத்தால் ஜகதாத்மாவாகப் பிரவேசித்துத் தாங்கிப் பல ப்ரகாரங்களோடு நின்றாலும், பூர்ணகல்யாணகுணனை ஒருவனே திவ்யமங்கள விக்ரஹங்களோடு பரமபதத்திலும் ஹ்ருதயகுஹையிலும் நிற்கிறார்'' என்று அருளியதும் ஸ்வல்பபாகங்களால் அநந்தமூர்த்தியாக பூர்ணகுணங்களுடன், பூர்ணதிவ்யவிக்ரஹத்துடன் காயங்களில் நிற்பதையும், அதிகஅம்சத்தால் பரமபதத்தில் வீற்றிருப்பதையும் அநுக்ரஹிக்கும். ஆநந்தத்தை நூறு நூறாகப் பெருக்கி வேதம் காட்டிற்று. ஸ்வரூபம் கார்யமாவதிலும், சக்தியால் ஸ்ருஷ்டி செய்வதிலும் பதினாயிரம்

பதினாயிரமாகப் பெருக்கி வகுத்து அந்த அல்பபாகத்தாலேயே ஸந்தோஹத்தைக் காட்டி வ்யூஹத்தைப் பராசரர் விளக்கினார். தத்த்வமுக்தாகலாபம் ஸர்வார்த்தஸரம் 53-இல் நிரவயவங்களில் ஸாவகாசஸம்யோகத்தைக் காட்டுகையில் "ஆகாசமும் பரமாணுவும் சேருகையில், அணு விபுவாகட்டுமே, அல்லது விபு அணுவாகட்டுமே" என்ற ஜைனரது ஆக்ஷேபத்திற்கு 'ஸம்யோகத்திற்கு உத்க்ருஷ்டமான ஆதாரம் ஓர் பரிமிதப்பொருள் தானே; அத்தோடு சேரும் பொருள் நிரம்சமானால், அவ்வளவே பரிமிதமான ஔபாதிகாம்சங்களைக்கொண்டு நிர்வஹிக்கவேண்டும்' என்று பதில்கூறியுளது. பரமதபங்கம் 36-ல் "இதில் (ஸர்வவ்யாப்தியில்) ப்ருதிவ்யாதிகளுக்கும் ஜ்ஞானசக்த்யாதி ஸம்யோகாவகாசத்தாலே கண்டுகொள்வது" என்று அருளியுளது. ஓர் ஸூத்ரத்தில் ரத்னகணங்கள் கோர்த்துத் தொங்குவதுபோல் அந்தர்யாமி யென்னும் ஸூத்ரத்தில் உலகங்கள் கோத்திருக்கின்றன என்ற கீதையும் ஸாவகாசஸம்யோகத்தில் ஸாரஸம். அந்தர்யாமி விக்ரஹங்கள் எல்லாம் பூர்ணம். 'பூர்ணமத: பூர்ணமிதம்'. பூர்ணமேவாவசிஷ்யதே என்கிற ச்ருதி ஸாவயவமான விக்ரஹங்களோடுகூடியிருப்பதாலும் எங்குமவஸ்திதியை எளிதில்நிர்வஹிக்கலாம்; பூர்ணகுணங்களாலும், பூர்ணசக்தியாலும் நிர்வஹிக்கலாம். 'நாராயணம் குணை: ஸர்வை:' என்று ஸ்ரீமத்வபாஷ்யம் தொடங்கிற்று. ஸர்வத்ர வ்யாப்தஸூத்ரமும் ப்ரத்யக்ஷ. ஸம்பந்தம் எங்குமுண்டாகலாம். 'அநுத்தமமான லோகங்களுக்குச் செல்வாய்' என்று ராமன் நியமிக்கலாம்; 'என்னையே சரணமடை; நான் உன்னை மோக்ஷணம்செய்கிறேன்' என்று தேர்த்தட்டில் கண்ணன் அபயமளிக்கலாம். ஆநந்தஸந்தோஹத்தின் ஓர் பாகத்தில் தூக்கத்தில் ப்ரதிதிநம் லயித்து துக்கமற்று ஸுகிக்கிறோம். 'அநந்தரோ ஸ்வாஹா:' என்கிற ச்ருதி நிரதிசயாநந்தாகாரமான விபுவான ஸுஜ்ஞாநத்தோடுகூடிய அநுகூலயஜீவஸந்தோஹத்திற்கு ஸாரஸமாக வொட்டும். விசிஷ்டனுக்கு அணுஸ்வரூபமும் ஆநந்தம்; விபுஜ்ஞாநமும் ஆனந்தம். மூன்று பக்ஷங்களின் தாரதம்யத்தில் நாமிறங்கவில்லை. ஸ்வரூபத்திலும் குணங்களும் விக்ரஹங்களும் உயர்ந்தன என்று பேசுவதுண்டு.

1,89,903

ஸமாசாரங்கள்.

சென்னை, மயிலாப்பூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ, ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் ஸ்ரீதேசிகன் திருவடி வாரத்தில், ஸ்ரீ. உபய வேதாந்தவித்வான் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர்ஸ்வாமி சென்ற ஒன்றரைவருஷமாக ஸ்ரீமத் ராமாயணப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். சென்ற சித்திரை மாசம் 23ஷ புதன்கிழமையன்று ஷை காலக்ஷேபம் ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியடைந்தது. இந்தப் பட்டாபிஷேக மகோத்ஸவத்துக்கு ஸ்ரீமான்கள் V. V. ஸ்ரீனிவாஸய்யங்கார், V. தேசிகாசார்யர் முதலிய ப்ரமுகர்கள் வந்திருந்து மிகவும் ஸம்ப்ரமத்துடன் நடத்திவைத்தார்கள். இதில் ஸ்ரீமான்கள் A. C. ஸ்ரீனிவாஸாசாரியர், சருக்கை ராகவய்யங்கார் முதலியவர்களுடைய சிரத்தை பாராட்டத்தகுந்தது.

(ஒரு நிருபர்)

பாரமைகாந்த்யம்

அல்லது

சிறுமாமனிசர் சிறப்பு.

ஸ்ரீமத் உபயவேதாந்தவித்வான் திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்யஸ்வாமி அனுக்ரஹித்த முன்னுரையுடன் கூடியது. ஸ்ரீ விசிஷ்டாத்வைத தத்வத்தின் ஸாராம்சங்களையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய ரஸங்களையும் பூர்வாசாரியர்கள் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே விளக்கும் ஒரு சிறு நூல். இயற்றியவர் மைலாப்பூர் வக்கீல் ஸ்ரீமான் தி. ராமஸ்வாமி ஐயங்கார். 100 காப்பிகள் நமது ஸபையின் அபிவிருத்திக்காக ஷையாரால் நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா-4 சபையின் சந்தாதாரர்களுக்குப் பாதி விலைக்குக் கொடுக்கப்படும்.

தயாசதகம் (தமிழுரையுடன்) கிளேஸ் பேபர்
விலை ரூ. 1—0—0

காபிகள் அடியில்கண்ட விலாஸங்களில் கிடைக்கும்.

1. ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, ஸ்ரீரங்கம்.
2. ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை, 29 கிருஷ்ண பவனம், வெப்பேரி, மதராஸ்.
3. ஸ்ரீ கோமளாம்பா பிரஸ், கும்பகோணம்.

Registered No. M. 3343

தேக ஆரோக்கியம் உங்களது
பிறப்புரிமையல்லவா?

மஹாசந்தனுதித் தைலம்.

அபார சக்தி வாய்ந்ததும், மூளைக்குச் சிறந்ததுமான தைலம் இது ஞாபகசக்தி யற்றவர்களுக்கும், மந்த மூளையுள்ளவர்களுக்கும் மனவருத்தம், பார்வை மந்தம், கண் எரிச்சல், தலைநோய், உச்சந்தலையில் தோல் உரிதல், வழுக்கைபோன்ற ஸகல நோய்களுக்கும் மிகச் சிறந்தது ஒரு மாதத்திற்கு உபயோகப்படக்கூடிய 12அவுன்ஸ் கொண்ட புட்டி விலை ரூ 5

உங்கள் நரம்புகளையும் மூளையையும் பலப்படுத்த ஆயர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் என். வி. ஸ்ரீராமா சார்லு அவர்களின் பிரசித்தி பெற்ற திவ்விய ஔஷதங்களை சாப்பிடுங்கள்

"சித்தகல்ப மகரத்வஜம்" (ரிஜிஸ்டர்ட்)

எவ்வளவு கடினமான வியாதியானாலும் தவறாது கண்டிப்பதில் பொன்னைப்போல் போற்றத் தக்கது மூளை வேலை செய்பவர்களுக்கு இது வரப்பிரசாதம் ரத்தத்தைச் சுத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றது பூராவும் குணமடைய 60 மாத்திரை கொண்ட புட்டி விலை ரூ 10

மதறாஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட், சென்னை.

ஹெட்ஆபீஸ் 289, எஸ்பிளனேட். }
கிளைஆபீஸ்.180, மவுண்ட்ரோட். } தபால்பெட்டி 151 மதறாஸ் { 'ரஸாயனசாலை ஸ்ரீராமபவனம்' மைலாப்பூர். போன் 3034. தந்தி 'கல்பம்'.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.